பக்கங்கள் : பன்னிரண்டு


Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 26 வெள்ளிக்கிழமை (11.01.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 46




போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து ஒரு தலைப்பட்சமாக விலகுவதாக இலங்கை அரசு அறிவித்ததையடுத்து தமது பணிகளை எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமையுடன் முடிவுக்குக் கொண்டுவரவிருக்கும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளுடனான தமது இறுதிச் சந்திப்பை நேற்று மேற்கொண்டனர்.

இங்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் லார்ஸ் சோல் பேர்க்கை கிளிநொச்சியிலிருக்கும் புலிகளின் அரசியல் செயலகத்தில் வைத்து அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வரவேற்கின்றமையையும் , சோல் பேர்க் தலைமையிலான குழுவினர், நடேசன், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பேச்சாளர் நவரூபன் செல்வி ஆகியோருடன் கலந்துரையாடுகின்றமையையும் படங்களில் காணலாம்.

# போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க தாம் தயார் எனப் புலிகள் அறிவிப்பு

## நோர்வேயின் அனுசரணைப் பணி தொடரவும் வலியுறுத்து

கொழும்பு,ஜனவரி11

எதுவிதமான நியாயங்களுமின்றி ஒருதலைப்பட்சமாக போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து இலங்கை அரசு விலகிவிட்ட நிலையிலும் அந்த உடன்படிக்கையை வரிக்குவரி நடைமுறைப்படுத்தி, அதனை நூறுவீதம் கடைப்பிடிப்பதற்கு தமது அமைப்புத் தயாராகவே இருக்கிறது என தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்திருக்கின்றது.

நோர்வேயின் அனுசரணைப் பணி தொடரவேண்டும் என்று கோரியுள்ள விடுதலைப் புலிகள், தமது அமைப்பு மீதான தடையை நீக்கி, தமிழர்கள் தங்கள் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதை அங்கீகரிக்க வேண்டும் என சர்வதேச சமூகத்தை வேண்டியும் இருக்கிறார்கள்.

போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து இலங்கை அரசு ஒரு தலைப்பட்சமாக விலகிக் கொண்டுள்ள பின்னணியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நேற்று விடுத்த அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

"இலங்கை அரசின் இனவாதப் போக்கைப் புரிந்துகொண்டு தமிழர் தேசத்தின் நியாயமான போராட்டத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்" - என்ற தலைப்பில் வெளியான அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

2002ஆம் ஆண்டு நோர்வே அரசின் ஆதரவுடன் இலங்கை அரசுக்கும் தமிழீழ

(11ஆம் பக்கம் பார்க்க)

## அல்வாயில் இளம்பெண் நேற்றுச் சுட்டுக்கொலை!

உடுப்பிட்டி,ஜன.11

அல்வாய் வடமேற்குப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இளம் பெண் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

திக்கத்தை சேர்ந்த கவிதா சண்முகநாதன் (வயது 19) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

வியாபாரிமூலையில் இருந்து இடம் பெயர்ந்து திக்கத்தில் வசித்து வரும் பிரஸ்தாப பெண், நேற்று வெளியில் சென்று விட்டு வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்த வேளை, வீதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## போர் திணிக்கப்படுமானால் புலிகள் அதையும் எதிர்கொள்ளத் தயாராம்!

கொழும்பு, ஜன. 11

போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிய பின்னர் அரசு முழுமையான இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டால் தாமும் முழுமையான யுத்தமொன்றில் ஈடுபடத் தயார் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச செய்திச் சேவையொன்றிற்கு கருத்துத் தெரிவித்துள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் எஸ்.புலித்தேவன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முழுமையான போர் ஒன்று எம்மீது திணிக்கப்பட்டால், நாங்கள் அதனை எதிர்கொள்வோம் எனக் குறிப்பிட்டுள்ள புலித்தேவன், 1997 - 98 காலப் பகுதியில் தான் சந்தித்த அதே நிலையை இம்முறையும் இராணுவம் சந்திக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் நோர்வேயைத் தொடர்ந்தும் அனுசரணையாளராகப் பணியாற்றுமாறு கோரிக் கடிதமொன்றை அந்த நாட்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களைப் பாதுகாக்கும் பலம் புலிகளிடம் உண்டு என்கிறார் நடேசன்

கிளிநொச்சி,ஜன.11

இலங்கை அரசுடனான போரை எதிர்கொண்டு, தமிழ மக்களைப் பாதுகாக்கும் பலம் விடுதலைப் புலிகளுக்கு உண்டு என புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற - கண்காணிப்புக் குழுவின் தலைவருடனான - சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுடன் உரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்த உன்பாட்டிலிருந்து விலகிய போதும் நோர்வேயுடனானதும் அனைத்துலக சமூகங்களுடனானதுமான புலிகளின் உறவு தொடர்ந்து பேணப்படும் என அரசியல்துறைப் பொறுப்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்த விலகல், தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ இலங்கை அரசு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்ற உண்மையையே வெளிப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைகளை அகற்றி, தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமையை அனைத்துலக சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்று நடேசன் மேலும் தெரிவித்துள்ளார்.(அ-சி)

## மகேஸ்வரன் படுகொலை வழக்கு

## மீண்டும் அடையாள அணிவகுப்பு நடத்துவதா; திங்கட்கிழமை நீதிமன்றம் முடிவு செய்யும்

கொழும்பு,ஜன.11

மகேஸ்வரன் எம்.பியைச் சுட்டுப் படுகொலை செய்தவர் என்று கருதப்படும் பிரதான சந்தேக நபரை மீண்டும் ஒருதடவை அடையாள அணிவகுப்பில் நிறுத்துவதா என்பது குறித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் திங்களன்று தனது முடிவை அறிவிக்கும்.

நேற்றுமுன்தினம் இந்தச் சந்தேகநபர் அடையாள அணிவகுப்பு ஒன்றில் நிறுத்தப்பட்டார். இரண்டு சாட்சிகள் அடையாள அணிவகுப்புக்கு அழைக்கப்பட்டனர். ஆனால், சந்தேகநபர் அடையாளம் காட்டப்படவில்லை என்பது தெரிந்ததே.

நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் இரவீந்திர பிரேமரத்ன முன்னிலையில், அதற்கு முதல்நாள் இடம்பெற்ற அடையாள அணிவகுப்புக் குறித்து ஆட்சேபனை கிளப்பப்பட்டது.

மகேஸ்வரன் எம்.பியின் குடும்பத்தவரின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மக்களிடம் குடும்பப் படம் கோருவதற்கு கடற்படைக்கு மன்னார் நீதிமன்றம் தடை

### விளக்க அறிக்கை சமர்ப்பிக்க பொலிஸாருக்கு உத்தரவு

மன்னார், ஜன. 11

மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் மக்களின் குடும்ப விவரம் மற்றும் புகைப்படம் எடுக்கும் புதிய நடைமுறைகளை உடன் இடை நிறுத்துமாறு கடற்படையினருக்கு மன்னார் மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் மன்னார் பள்ளிமுனைப் பகுதி மக்கள் கடற்படையினரால் புகைப்படம் எடுக்கப்படுவது சம்பந்தமான செய்தியைச் சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் ஒருவர், பொலிஸார் இருவரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான மனு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் நீதிபதி பிரபாகரன் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இவ்வாறான நடைமுறைகள் மக்களின்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கெயர் சர்வதேசத்தின் அனுசரணையுடன் பல்வேறு அபிவிருத்தி பங்காளிகளின்
## பங்கேற்புடன் கூடிய யாழ் மாவட்ட சமூக மட்ட அமைப்புகளின்

care

## அபிவிருத்தியில் சமூக வெளிப்பாடு Social expression in Devlopment

CIDA

### கண்காட்சியும் கலை நிகழ்வுகளும்

கோப்பாயில் : இடம்: யா/கோப்பாய் கிறிஸ்வக் கல்லூரி
காலம்: தை 12-13, 2008 (இரு தினங்கள்)

சாவகச்சேரியில் : இடம்: யா/சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி
காலம்: தை19.2008 நேரம்(மு.ப.9.00- பி.ப.4.00)

*(உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விற்பனையும் இடம்பெறும்)*

*அனைவரையும் அழைக்கின்றோம்.*

யாழ் மாவட்ட "நட்சத்திரா சமாசம்"

---

Sri Lanka Insurance

## வேலைவாய்ப்பு

*மாணவ மணிகளே A/L பரீட்சை முடிவினை பெற்றுவிட்டீர்களா? அடுத்தது என்ன?*

*சந்தைப்படுத்தல் பிரிவில் முழுநேரமாகவோ பகுதி நேரமாகவோ பணியாற்றி வருமானத்தைப் பெற்று உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள...*



### சமூகமளியுங்கள் நேர்முகத் தேர்விற்கு

காலம்:- 12/01/2008 சனிக்கிழமை
9.00 - 11.00 am

இடம் :- வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

குறிப்புஃ வேறு தொழில் புரிபவர்களும் பகுதி நேரமாக இணைய விரும்பின் சமுகமளிக்கவும்.

---

## சிங்கப்பூர், மலேசியாவில்!!!

வேலைவாய்ப்புடன் கூடிய கற்கைகள்

* Hotel Management
* Engineering
  (* Civil * Electronic and Electrical * Automobile * Aircraft Maintenance)
* Computer Science
* ACCA, CAT, CIMA

விரைவான பயண ஏற்பாடு (2, 3 கிழமை)
வங்கிக்கணக்கு மீதி (Sponsor) அவசியமில்லை
மிகக்குறைந்த அடிப்படைத் தகைமை G.C.E. O/L

**மலேசியாவில் மிகக்குறைந்த செலவில் வேலைவாய்ப்புகள் பெற்றுத்தரப்படும்.**

* இரண்டு வருட ஒப்பந்தம்
* சம்பளம் 30,000 - 40,000 வரை
* தங்குமிட வசதி நிறுவனத்தால் வழங்கப்படும்
* கல்வித் தகைமைகள் அவசியமில்லை

Student Visa, மலேசியா வேலைவாய்ப்பு போன்ற விவரங்களுக்கு எமது யாழ்.பிரதிநிதியை தொடர்புகொள்ள அழையுங்கள்:

**077 9672883, 077 6320282**

**GOLDEN EDUCATION SERVICES,**
C/O Sun Net,
285, 1/1 D, காலி வீதி,
வெள்ளவத்தை

OR

**GOLDEN EDUCATION SERVICES,**
சுண்டிக்குளி.

(69939)

---

## மரண அறிவித்தல்

### *மரியாம்பிள்ளை யேசுதாசன்*



யாழ்ப்பாணம்,கச்சேரி - நல்லூர் வீதி, புனித ஆசீர்வாதப்பர் ஆலயப் பங்கைச் சேர்ந்தவரும் தற்போது இந்தியாவில் வசித்து வந்தவருமான மரியாம்பிள்ளை யேசுதாசன் நேற்று (10.01.2008) வியாழக்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் எலிசபேத்ராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற றொமின் அன்ரனிறறா, நிமலின் மரியற்றா (கனடா), சிறோமின் அனிற்றா (லண்டன்), லோயின் மரிற்றா(இந்தியா), அருட்சகோ. லெபோண் சுதன்(அ.ம.தி), திவ்வியன் பௌற் (இந்தியா), காலஞ்சென்ற தயாளின் கியோமா ஆகியோரின் அன்புள்ள தந்தையும், சூசைதாசன், தவமணி ஆகியோரின் அருமைச் சகோதரனும் அருட்சகோதரி வில்பிறட்(திருக்குடும்ப கன்னியர் சபை) அவர்களின் பெறாமகனும்,ஜோ.வலன்ரைன் (லண்டன்), அன்ரன் (கனடா), றொஷான் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமுள்ள மாமனாரும், தாமிரா, ஷாமிரா, அவினாஷ், ஆகாஷ், திவ்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் சென்னையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்சகோ. லெபோண்சுதன்
(மகன் - அ.ம.தி.)
தொடர்பு:- 0091 4424864437
தொ. பே. 0091 9940465288

40, ஆசீர்வாதப்பர் வீதி,
கச்சேரி - நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம். (69998)

---

## தவறிவிட்டது

10.1.2008அன்று யாழ்ப்பாணத்துக்கும் கச்சேரிக்கும் இடையில் செல்லும்போது மினி வானில் கறுப்பு நிற பை ஒன்று அடையாள அட்டை மாற்றுவதற்குரிய ஆவணங்களுடன் தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள். யாழ். பிரதேச செயலகத்தில் ஒப்படைத்துதவவும்.
T.P. 222 2209

---

## முக்கிய அறிவித்தல்

ஆங்கில ஆசிரியர் டிப்ளோமா பட்டம் (D.E.T.E) பெற்றவர்களுக்கான குழுப்படப் பிடிப்பு நாளை (12.01.2008) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறும்.

அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

**தலைவர், D.E.T.E சங்கம்.**

---

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை
### முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்
### கல்வியாண்டு 2006/2007

மேற்படி கல்வியாண்டின் விரிவுரைகள் பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகும்.

*முதலாம் வருடம் - 2008.01.21*
*2,3,4ஆம் வருடம் - 2008.02.05*

மீள் பரீட்சை முதலாம், இரண்டாம் அரையாண்டு (பழைய பாடத் திட்டம்)

மேற்படி 1,2,3,4ஆம் வருட மீள் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தை 2008.01.14 ஆம் திகதி முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு 50 ரூபா வீதம் பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கி கிளையில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும். பூர்த்திசெய்த விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 2008.01.25 அன்று அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றனர். (C-551046)

பதிவாளர்

---

## இதய அஞ்சலி

*காரைநகர் மணற்காட்டு முத்துமாரி அம்மன் ஆலய முன்னாள் திருப்பணிச் சபைத் தலைவர்*

### அம்பலவாணர் சங்கரப்பிள்ளை

அவர்கள் லண்டனில் காலமான செய்தி அறிந்து கவலையடைவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

அடியார்கள்,
மணற்காட்டு முத்துமாரியம்மன் ஆலயம், காரைநகர்.

---

## கண்ணீர் அஞ்சலி

*எமது சக ஆசிரியை*
திருமதி அருணா சாந்திநாதன்
*அவர்களின் தந்தை*

### சின்னத்தம்பி நாகேந்திரம் கந்தப்பிள்ளை

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
[illegible]

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
22★12★1933

ஆண்டவன் திருவடியில்
21★12★2006



### அமரர் முருகேசு உபயசுந்தரம்பிள்ளை

தந்தையே உன் பிரிவுத் துயரால் ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
உங்கள் அன்பு, பண்பு, பாசம்நிறைந்த முகம் மறந்திடுமா? மறைந்திடுமோ!
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவலைகள் நெஞ்சை விட்டு நீங்காதே!
தந்தையே அன்பு முகம் பார்த்தே படுத்துறங்கிப் பழகிய நாம்
இப்போது தூக்கமின்றி துடியாய்த் துடிக்கின்றோம்
எத்தனை யுகங்கள் மலரட்டும் எம் நெஞ்சமதில் உங்கள் ஞாபகம் நிலைத்திருக்கும்
'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.58A, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம். (69977)

குடும்பத்தினர்.

---

## இலங்கை மின்சார சபை
## யாழ். பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு நாளை (12.01.2008) சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

*கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம்.*

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.
2008.01.09

*"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கை கொடுக்கும்"*
*இலங்கை மின்சார சபை*

(C-551049)

---

## பொருளியற் கல்லூரி

பெருமாள் கோயில் அருகில்
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

**இரு இடத்திலும்**

இணுவில் மத்திய கல்லூரி அருகில்
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.

மீண்டும் ஒரு புதிய பிரிவு
நாளை ஆரம்பம்

**A/L 2010** கலை, வர்த்தகப் பிரிவுகள்
(சனி - ஞாயிறு)

…கள் நன்கு அறிந்த யாழ். நகரின் பிரபல்யம் மிக்க ஆசிரியர் குழுவினால்

| A/L 2010 | யாழ்ப்பாணம் | இணுவில் |
| --- | --- | --- |
| பொருளியல் | சுதாகரன் | சுதாகரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக் கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| அளவையியல் | R.P.சர்மா | ஜெயசுரேஸ் |
| அரசியல் | றஜீவன் | சுகாஷ் |
| இந்து சமயம் | தரன் | தரன் |
| கிறிஸ்தவம் | ஜெயமோகன் | ஜெயமோகன் |
| வரலாறு | சுதன் | சுதன் |
| நாட. அரங்கியல் | கணேஷ் | கணேஷ் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

* நீங்கள் விரும்பிய இடங்களில் இப்புதிய பிரிவிற்கான அனுமதிகளை நாளை முதல் பெற்றுக் கொள்ளலாம்.

**A/L DAY Class**

வர்த்தகப்பிரிவு - திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி
கலைப் பிரிவு - பிரிவு I திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி
கலைப் பிரிவு - பிரிவு II சனி, ஞாயிறு

* இந்த நாள்களில் நடைபெறும் சிந்த வகுப்புகளுக்கான நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (#/54881)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனை நாயகன் முரளிக்கு நாடாளுமன்றில் கௌரவம்



கொழும்பு, ஜன.11

டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றி உலக சாதனை படைத்த இலங்கை அணி வீரர் முத்தையா முரளிதரன் நேற்று நாடாளுமன்றுக்கு அழைக்கப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களால் கௌரவிக்கப்பட்டார்.

நேற்றுக் காலை 11.45 மணியளவில் நாடாளுமன்றில் சபாநாயகரின் அதிதிகள் அமரும் கூடத்தில் முத்தையா முரளிதரனும் இலங்கை கிரிக்கெட் அணியைச் சேர்ந்த ஏனைய வீரர்களும் வந்தமர்ந்தனர். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ, மு.கா.தலைவர் ரவூவ் ஹக்கீம், அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா உட்பட பலர் முரளிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து உரையாற்றினர்.

அச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் எவரும் சபையில் இருக்கவில்லை. இதனைத் தொடர்ந்து சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்கு பண்டார மதிய போசன விருந்தளித்து இலங்கை அணி வீரர்கள் அனைவரையும் கௌரவித்தார்.

# இறுதித் தீர்ப்பு எதுவாயிருந்தாலும் இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும்

## நிபந்தனைகளுக்கு ஐ.சி.சி. அடிபணியாது என்கிறார் மல்கம் ஸ்பீட்

டுபாய், ஜன.11

ஹர்பஜன் சிங் விவகாரம் தொடர்பாக இந்தியா விடுக்கும் நிபந்தனைகளுக்கு அடிபணியப் போவதில்லையென குறிப்பிட்டுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் நிறைவேற்று அதிகாரி மல்கம் ஸ்பீட், இறுதித் தீர்ப்பு எதுவானாலும் இந்தியா அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென தெரிவித்துள்ளார்.

ஐ.சி.சி. விசாரணையின்போது ஹர்பஜன் மீதான குற்றச்சாட்டு நிராகரிக்கப்படாவிட்டால் ஆஸ்திரேலியச் சுற்றுப்பயணத்தை கைவிடப் போவதாக இந்திய அணி எச்சரித்துள்ள நிலையிலேயே மல்கம் ஸ்பீட்டின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஆஸ்திரேலியச் சுற்றுப்பயணம் தொடர்வது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். மேன்முறையீடு செய்வதற்கு என சில நடைமுறைகள் உள்ளன, அதன் படி ஹர்பஜன் செயற்பட்டுள்ளார் என ஸ்பீட் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா இந்த நடைமுறைகளில் ஏற்கனவே கைச்சாத்திட்டுள்ளது, நாங்கள் அந்த நடைமுறையைப் பின்பற்றுவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணிக்கு ஒரு விதமான சட்டங்களையும் ஏனைய அணிக்கு வேறு விதமான சட்டங்களையும் கொண்டிருக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்திரேலியச் சுற்றுப் பயணத்தை தொடர்வதற்காக மேன்முறையீட்டின் மீதான விசாரணை தாமதமாகலாம் என்பதை மல்கம் ஸ்பீட் நிராகரித்துள்ளார்.

இதேவேளை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதித் தலைவர் லலித் மோடி சுற்றுப்பயணத்தை தொடர்வது என்ற முடிவு தற்காலிகமானது, ஹர்பஜனின் மேன்முறையீட்டுத் தீர்ப்பின் பின்னரே இது குறித்து இறுதி முடிவெடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

''ஹர்பஜனைத் தடைசெய்வது என ஐ.சி.சி. எடுத்த முடிவு தற்காலிகமாகமானது. அதே போன்று சுற்றுப்பயணம் குறித்த முடிவும் தற்காலிகமானது. ஹர்பஜன் குற்றவாளியல்ல என அறிவிக்கப்படும் வரை இந்தச் சர்ச்சை தொடரும்.'' - என அவர் தெரிவித்துள்ளார்.

## விளையாட்டு அரங்குகளில்

# பயிற்சியாட்டம்; இந்தியா 325-9

கான்பரா, ஜன.11

ஆஸ்திரேலிய ஏ.சி.ரி. லெவன் அணிக்கு எதிராக நேற்று ஆரம்பமான 3 நாள் பயிற்சியாட்டத்தில் இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 325 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை 'டிக்ளேயர்' செய்தது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸைத் தொடக்கிய ஏ.சி.ரி. லெவன் அணி நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 10 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

கும்ளே, சச்சின், கங்குலி, லக்ஸ்மன் ஆகிய முன்னணி வீரர்களுக்கு ஓய்வுகொடுக்கப்பட இப்பயிற்சியாட்டத்தில் இந்திய அணியை டோனி வழிப்படுத்தினார். நாணயச்சுழற்சியில் வென்ற அவர் தனது அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

ஆரம்பவீரர்களாக வசீம் ஜாபர் மற்றும் வீரேந்திரர் ஷேவாக் ஆகியோர் களமிறங்கினர். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி தனது திறமையை நிரூபிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட ஷேவாக் வெறும் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த தினேஷ் கார்த்திக் 25 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

தொடர்ந்து ஜோடி சேர்ந்த வசீம் ஜாபர், டிராவிட் ஆகியோர் அபாரமாக ஆடி அணிக்கு நம்பிக்கை தந்தனர். ஜாபர் 92 ஓட்டங்களையும், டிராவிட் 62 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த வீரர்களில் டோனி 38 ஓட்டங்களையும், பதான் 33 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தனர். ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் சோபிக்கத் தவறிய யுவராஜ் சிங் 2 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் விக்கெட்டைப் பறிகொடுத்து ஏமாற்றமளித்தார்.



டிராவிட் - ஜாபர் ஜோடி

இறுதியில் இந்திய அணி 84 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 325 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டத்தை 'டிக்ளேயர்' செய்வதாக அறிவித்தது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆடத் தொடங்கிய ஏ.சி.ரி. லெவன் அணி நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 10 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரோஜர்ஸ் 2 ஓட்டங்களுடனும், கெவ்ன் 8 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெறும்.

## பொண்டிங்கிற்கு எதிர்ப்பு

ஆஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங்கை அந்த அணியின் முன்னாள் வீரர்கள் சிலர் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

முன்னாள் வீரரான நெய்ல் ஹார்வி கூறுகையில், ''பொண்டிங் வாய்மூடி பேசாமல் இருந்திருந்தால் சிட்னி போட்டியில் எவ்வித அசம்பாவிதமும் ஏற்பட்டிருக்காது. விளையாட்டு வீரர்களுக்கு உரிய செயல்திறனும் நன்னடத்தையும் அவரிடம் இல்லை. ஹர்பஜன் சிங் எதிரணி வீரரை 'குரங்கு' என்று கூறியிருந்தாலும் அது இனவெறித் துவேஷம் அல்ல.'' - என்றார்.

முன்னாள் வீரரான தொம்ஸன் கூறுகையில், ''ஹர்பஜன் மீது புகார் கூற பொண்டிங்குக்கு உரிமை இல்லை. ஆஸ்திரேலிய வீரர்கள் களத்தில் உண்மையான வீரர்கள் போல் நடந்து கொள்ளத் தவறினர். சிட்னி டெஸ்ட் நிறைவடைந்தவுடன் எந்த ஒரு ஆஸ்திரேலிய வீரரும் இந்திய அணித்தலைவர் கும்ளேவுடன் கைகுலுக்கவில்லை. இது ஏமாற்றத்தையளித்தது.'' - என்றார்.

# உயர் நீதிமன்றம் அருகே தற்கொலைத் தாக்குதல்

# பாகிஸ்தானில் 22 பேர் பலி; 60 பேர் வரை காயம்

லாகூர், ஜன.11

கிழக்குப் பாகிஸ்தான் நகரான லாகூரில் நேற்று வியாழக்கிழமை தற்கொலைதாரியொருவர் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் குறைந்தபட்சம் 22 பேர் பலியாகினர். 60 பேர் வரை காயமடைந்தனர். இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டோரில் அதிகமானோர் பொலிஸார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயர் நீதிமன்றக் கட்டடத்துக்கு வெளியே திரண்டிருந்த பொலிஸாரை இலக்குவைத்து இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையான பொலிஸாரும் சிவிலியன்களும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்கள். அநேகர் வீதியில் மூர்ச்சித்துக் கிடந்தனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பின் ஆட்சிக்கு ஆட்சேபனை தெரிவித்து, உயர் நீதிமன்றக் கட்டடம் வரை ஆர்ப்பாட்டப் பேரணி நடத்த வழக்கறிஞர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். பேரணியையும் அசம்பாவிதங்களையும் தடுக்கும் பொருட்டே நீதிமன்றக் கட்டடத்துக்கு முன்னால் பெருந்தொகையான பொலிஸார் திரண்டிருந்தனர் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

மோட்டார் சைக்கிளில் விரைந்துவந்த ஒருவரை நிறுத்துமாறு பொலிஸார் சைகை காட்டினர். அவர் அச்சமயம் தான் மறைத்து வைத்திருந்த குண்டை வெடிக்கச் செய்துள்ளார். குண்டுவெடிப்பில் அவரில் உடலும் சின்னாபின்னமாக சிதைந்துவிட்டது என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

''குண்டுத் தாக்குதலில் சிக்கிய இருபத்தைந்துக்கு மேற்பட்டோரை நான் கண்டேன். இவர்களில் மரணித்தவர்களும், காயமுற்றவர்களும் அடங்குவர். இவர்களில் பொலிஸாரும் சிவிலியன்களும் இருந்தார்கள். காயமுற்றோர் குருதி வெள்ளத்தில் கிடந்தவாறு உதவிகோரி ஓலமிட்டனர்.'' - என ஏ.பி. நிறுவன புகைப்படப் பிடிப்பாளர் தெரிவித்துள்ளார்.

குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற சமயம் அவர் லாகூர் உயர் நீதிமன்றக் கட்டடத்துக்கு வெளியே ஒரு புறத்தில் நின்று கொண்டிருந்துள்ளார். இவர் தாடியும் நீண்ட தலைமயிரும் கொண்ட துண்டிக்கப்பட்ட ஒரு நபரின் தலையையும் கண்டார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.




''இது ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல். இது நிச்சயமாக பொலிஸாரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதல்.'' - என லாகூர் பிரதம பொலிஸ் அதிகாரி மாலிக் இக்பால், டோன் நியூஸ் தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார்.

குண்டுத் தாக்குதலை அடுத்து அப்பகுதி பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது. அவர்கள் அப்பகுதியில் திரண்டிருந்த சிவிலியன்களையும், பாதசாரிகளையும் நோக்கி மீட்புப் பணிகளுக்கு தடையாக இருக்காதீர்கள். மருத்துவமனைகளுக்குச் சென்று, உயிருக்குப் போராடிக்கொண்டிருப்போருக்கு இரத்த தானம் செய்யுங்கள் எனக் கேட்டுக்கொண்டார்கள் என் அங்கிருந்து வெளியேறியோர் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்க ஆக்கிரமிப்புக்குப் பின்னர் 151,000 ஈராக்கியர்கள் பலி

ஆய்வில் தகவல்

நியூயோர்க், ஜன.11

அமெரிக்கா 2003இல் ஈராக்கை ஆக்கிரமித்ததுமுதல் அங்கு பலியான ஈராக்கியர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 51 ஆயிரம் எனப் புதிய ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்திற்காக ஈராக்கின் சுகாதார அமைச்சு வீடுவீடாக மேற்கொண்ட ஆய்வின் மூலம் இது தெரியவந்துள்ளது.

வன்முறைகளே உயிரிழப்பிற்கான முக்கிய காரணம் என்றும் 15 முதல் 59 வயதுடையோரே அதிகம் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் ஒரு லட்சத்து51ஆயிரம் என்பது துல்லியமான எண்ணிக்கைஎனத்தெரிவிக்கப்படவில்லை. 104,000 முதல் 223,000 இற்கு இடைப்பட்டவர்கள் பலியாகியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதல் நடைபெறும் பகுதிகளில் இவ்வாறான ஆய்வை மேற்கொள்வது கடினமான விடயம் என உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது. மோதல் ஆரம்பமானதிலிருந்து பாரிய உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதை ஆய்வு புலப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஆக்கிரமிப்பிற்குப் பின்னர் ஈராக்கில் ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறித்து சர்ச்சை காணப்படுகின்றது.

2006 ஒக்டோபரில் ஆய்வொன்றில் 6 லட்சத்து 55,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அமெரிக்கா இது குறித்த புள்ளி விவரங்கள் எதனையும் வெளியிடாத போதிலும் ஜனாதிபதி புஷ் ஒருமுறை 30,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சுகார்ட்டோ கவலைக்கிடம்

ஜகார்த்தா, ஜன.11

இந்தோனேஷியாவின் முன்னாள் ஜனாதிபதி சுகார்ட்டோவின் உடல்நிலை கவலைக்கிடமாகவுள்ளது என அவருக்கு சிகிச்சை அளித்துவரும் டாக்டர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தோனேஷிய நாட்டின் சர்வாதிகாரியாக 32 ஆண்டு காலம் ஆட்சி நடத்திய சுகார்ட்டோ, பத்து ஆண்டுகளுக்கு முன்பு பதவியை விட்டு இறங்க நேரிட்டது. அண்மையில் உடல்நலம் பாதிக்கப்பட்ட அவர், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இரத்த அழுத்தக் குறைவு, இருதய நோய், சிறுநீரகப் பாதிப்பு, நுரையீரல் கோளாறு போன்ற பல்வேறு நோய்களால் அவதிப்பட்டு வரும் சுகார்ட்டோவின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக அவருக்குச் சிகிச்சையளித்துவரும் டாக்டர்கள் நேற்று அறியத் தந்தனர்.

## உலக அரங்கில்

## 2008இல் 17 செயற்கைக்கோள்களை விண்ணுக்குச் செலுத்த சீனா திட்டம்

பீஜிங், ஜன. 11

சீனா இந்த ஆண்டு மட்டும் 17 செயற்கைக் கோள்களையும், 15 ரொக்கெட்டுக்களையும் விண்ணில் செலுத்தத் திட்டமிட்டுள்ளது.


அத்துடன் 3ஆவது முறையாக விண்வெளி வீரர் ஒருவரையும் விண்ணிற்கு அனுப்புகிறது. ஷென்ஷோவ்-7 என்ற விண்கலம் மூலம் விண்வெளி வீரர் ஒருவர் ஒக்டோபர் மாதம் விண்ணுக்கு அனுப்பப்டுவார். அவர் விண்ணில் நடைப்பயணம் செய்வார்.

சீனா 2003ஆம் ஆண்டில் விண்ணில் மனிதர் ஒருவரை அனுப்பி அமெரிக்கா, ரஷ்யாவுக்கு அடுத்து மனிதனை விண்ணுக்கு அனுப்பிய நாடு என்ற பெருமையைத் தட்டிச் சென்றது. அதன்பிறகு 2005ஆம் ஆண்டு 2 விண்வெளி வீரர்கள் ஷென்ஷோவ் - 6 விண்கலம் மூலம் விண்ணுக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் விண்ணில் 5 நாள்கள் தங்கியிருந்தனர். தற்போது மூன்றாவது தடவையாக விண்வெளிக்கு வீரர் ஒருவரை அனுப்ப சீனா தயாராகிவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

## திரு. இராஜேந்திரம் ஜோர்ஜ் (பிரதி அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)



உயர்திரு.

### இராஜேந்திரம் ஜோர்ஜ்

*(இ.ஆ.சே. - I, விஞ்ஞான ஆசிரியர்)*

பிறந்த திகதி : 04.01.1948
பிறந்த இடம் : உடுவில்
ஆரம்பக்கல்வி : யா/றோ.க.தமிழ்கலவன் பாடசாலை, உடுவில்
இடைநிலைக்கல்வி, உயர்தரக்கல்வி } யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்

**ஆசிரியர் சேவை**

1. இணுவில் சைவ மகாஜனக் கல்லூரி 19-10-1971
2. பலாலி ஆசிரிய கலாசாலை (விசேட பயிற்சி விஞ்ஞானம்) 21-01-1972 - 31-12-1973
3. காலி முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயம் (மல்ஹருஸ் சுல்ரியா ம.வி) 01-01-1974
4. யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி 01-01-1982 தொடக்கம்

பிரதி அதிபர் 14-02-2004
மணிவிழா 04-01-2008

### வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்து

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பிரதி அதிபர் இ.ஜோர்ஜ் அவர்கள் அகவை அறுபதில் ஓய்வுபெறுவதை முன்னிட்டு வெளிவரும் மணிவிழா சிறப்பு மலரூடாக வாழ்த்துவதில் பேரு வகையடைகிறேன். இவர் கடந்த முப்பத்தாறு வருட காலமாக சிறந்த விஞ்ஞான ஆசிரியராகக் கல்வி உலகிற்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளார். இதில் இருபத்தைந்து ஆண்டுகள் தான் கல்வி கற்ற கல்லூரியில் சிறந்த ஆசிரியராக விளங்கியதுடன் விளையாட்டுத்துறை உட்பட பாடசாலையின் பல்வேறு துறைகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளார்.

என்றும் சிரித்த முகத்துடன் காட்சிதரும் இவர் படி முறை வளர்ச்சி பெற்று பிரதி அதிபராக நான்கு வருடங்கள் சேவையாற்றியுள்ளார். சிறந்த கற்பித்தல் முறை காரணமாக இவருக்குப் பாடசாலைச் சமூகத்தில் நல்ல ம்திப்பு உள்ளமை யாவரும் அறிந்ததே.

ஸ்கந்தா அன்னையின் வளர்ச்சியில் சீரிய பணியாற்றிய இவருடைய ஓய்வுகாலம் சிறந்து விளங்க இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

கல்வி அலுவலகம், வலிகாமம்.

ப.விக்னேஸ்வரன்.
வலயக் கல்விப்பணிப்பாளர்.

### ஆளுமை மிக்க மாணவரை உருவாக்கியவர்

அன்றலர்ந்த தாமரைபோல் என்றும் மலர்ந்த வதனத்துடன் மாணவர்களின் உள்ளங்கவர் கள்வனாகத் தனது தனித்துவமான நடத்தைக் கோலங்களை, மாணாக்கர்களின் எண்ணப் பரப்பில் என்றும் அழியாத தடங்கலாகப் பதித்தவர்;

அவர்களின் ஆளுமைப் பரிமாணத்திற் செல்வாக்குச் செலுத்திய என்றும் அணையாத கலங்கரைச் சுடராக விளங்கியவர் திருவாளர் ஜோர்ஜ் அவர்கள். அவர் அகவை அறுபதில் ஓய்வு பெற்றாலும் அவரது வழிகாட்டற் பணிகள் மாணவர்களின் ஆயுட்காலம் முழுவதும் எண்ணம், சொல், செயல்களில் பிரதிபலித்துச் சந்ததி சந்ததியாகத் தொடர்ந்து செல்லும் தன்மை கொண்டவையாகும்.

இவரது எதிர்கால வாழ்வு தேக ஆரோக்கியத்துடன் நலமே அமைய இறையருளை யாசிக்கிறேன்.

சு.சுந்தரசிவம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்), வலிகாமம் வலயம்.

### ஸ்கந்தாவின் புகழ்மிக்க மைந்தன்

உடுவில் பிரதேசத்தின் முதன்மைப்பாடசாலையாக விளங்கும் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழமையையும் வரலாற்றுச் சிறப்பையும், கல்வி மேம்பாட்டையும் நாமும், யாழ் சமூகமும் நன்கு அறிந்துள்ளோம். ஆண்டுகள் பல கழிந்தும் நாட்டுச் சூழ்நிலை அசாதாரண நிலையில் எம்மைத் தொடர்கின்ற போதும் எதற்கும் சலிக்காது மாணவர் ஆளுமை விருத்தியிலும், கல்வி சார் முயற்சிகளில் மேன்மையடையவும் பணிபுரியும் நல்லாசிரியர் வரிசையில் ஒருவராக திரு.இராஜேந்திரம் ஜோர்ஜ் அவர்கள் விளங்குகிறார். 36 வருடங்கள் ஆசிரிய சேவையைப் பூர்த்திசெய்து அறுபது வயதில் ஓய்வுபெறும் மணிவிழா நாயகரின் சேவைநலன் பாராட்டு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதிற் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இக்கல்லூரியின் அரவணைப்பில் வளர்ந்த திரு.ஜோர்ஜ் அவர்கள் தமது கல்லூரி மென்மேலும் பெருமையடைய, சாதனைகளைப் பெற உழைத்தவர். கற்பதற்கு கற்றல் என்பதைத் தமக்குரிய விடயப் பொருளாகக் கொள்ளாமல் மாணவருக்கு மட்டுமே உரிய குறிக் கோளாக நோக்கும் இக்காலத்தில் கல்வி, வாழ்க்கை முழுவதும் நீடித்தல்வேண்டும் என்ற மனப்பான்மையுடன் மாணவருக்குத் தரமான விஞ்ஞானக் கல்வியைப் போதித்தவர். ஓய்வு பெறும் காலத்தில் அவர் ஆரோக்கியமாகவும் குடும்பம் நன்றாகவும் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

செ.குபேரநாதன்
கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில்.

### அனைவரையும் கவர்ந்தவர்

'ஜோர்ஜ்' ஆசிரியர் என்றவுடன் எவருக்கும் நினைவுக்கு வருபவன அன்பான பேச்சும், பண்பும், எவரையும் வசீகரிக்கும் இளமை குன்றாத் தோற்றமும்தான். தனது 36 வருட ஆசிரிய சேவையில் பல தலைமுறை மாணவருக்குக் கற்பித்த அனுபவம் மிக்கவர், மாணவர் இயல்பறிந்து நகைச்சுவையாகக் கற்பிப்பதனால் மாணவர்களால் என்றும் மறக்கப்பட முடியாதவர். பிரச்சினைகள் ஏற்படுகின்றபோது மாணவர் நலன்கருதி, அவர்கள் சார்பாகவே வாதிடுவார் என்பது மாணவர் உலகம் நன்கு அறிந்த விடயமாகும். ஆசிரியர் எவருடனும் கருத்து முரன்பாடு இன்றி எல்லோரையும் அரவணைத்துச் செல்கின்றவர். தன்னையும், தான் இருக்கும் சூழலையும் மகிழ்ச்சியாக வைத்திருப்பவர் மணி விழாக்காணும் அவரும், அவரது குடும்பத்தவரும் எல்லாவளமும் பெற்று வாழ இறையருளை வேண்டுகிறேன்.

பா.மகாலிங்கசிவம்
(தலைவர், ஆசிரியர் கழகம்).

### PRINCIPAL'S MESSAGE OF FELICITATION

I have great pleasure in giving this message of felicitation on the eve of the retirement of our deputy principal Mr.R.George. His roles at Skanda were multifarious. He served at Skanda for twenty six years as a teacher, sectional head and deputy Principal. My acquaintance with him started in 1986. It still remains vivid in my memory how he welcomed me when I first assumed my duty at Skanda in 1986 as a teacher.

A galaxy of great teachers served at Skanda, Mr.R.George is one among them. He is a wizard of Science. Students enthusiastically learn even hard lessons from him. The results of various examinations hold ample proof of his capacity as a successful teacher. He worked with commitment for the betterment of the students of Skanda. He set an example for the rest of the staff to emulate the ways and means in the pedagogical field. His Co - operation in the adminstrative work is praise - worthy. We were never at varients in any matter in regard to the administration.

He always has a lovely smile which is symbolic of the love of humanity and with his radiant smile, he makes so many friends. His happy nature, friendly disposition, large hearted ways will surely remain green in our minds. I wish him a happy and peaceful Life.

K.SIVAJI, PRINCIPAL

### நல்லாசிரியப் பெருந்தகை

திரு.இ.ஜோர்ஜ் அவர்கள் ஸ்கந்தாவின் தவப் புதல்வர்களிலொருவர். கல்லூரியின் வரலாற்றில் முதன்மைமிக்க ஆசிரியப் பெருந்தகை. விஞ்ஞான பாடத்தில் விவேகி. விளையாட்டுத் துறையில் சிறந்த ஆற்றுப்படுத்துனர். ஆளுமைமிக்க பிரதி அதிபர் என இப்பெருந்தகை பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம். எமக்கெல்லாம் சிறந்த வழிகாட்டியாக விளங்கியவரும் நல்லாசிரனின் மணிவிழாச் சிறக்க மனம்நிறைந்த வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றேன். கடந்த இருபத்தியாறு ஆண்டுகளாக கல்லூரிக்காக தாங்கள் செய்த அர்பணிப்புமிக்க பணிகள் மறக்க இயலாதவை. பலநூறு மாணவர் களைப் பல்கலைக்கழகம் அனுப்பிய நல்லாசிரியப் பணியை மாணவர்களும், பெற்றோர்களும் என்றும் நன்றியோடு வாழ்த்திய வண்ணமுள்ளனர். கல்லூரியின் விளையாட்டுத்துறை வெற்றிக்காக எத்தனையோ இரவு பகல் உழைத்த வாழ்வை நாம் பூரிப்போடு போற்றுகிறோம். கல்லூரி அபிவிருத்திக்காக பழைய மாணவர்களை நாடித்தேடிப் பணிசெய்த தங்கள் பண்பு என்றும் நன்றிக்குரியது. தங்கள் எதிர்கால நல்வாழ்வுக்கு இறைவனைப் பிரார்த்தித்து நல்வாழ்த்துக் கூறி அமைகிறேன்.

ஆறு.திருமுருகன், பிரதி அதிபர்.

### MESSAGE FROM THE VICE - PRINCIPAL

We grew up together as one family, gained knowledge and the art of living. Guided our generation to face the future. Shared our joys and sorrows, like siblings. The episode of long years of togetherness seem to have come to an end. With the hope of walking together, we part though uncertainties hold in the future.

I wish him all success.

S.MAHENDRAN, VICE - PRINCIPAL.

**ஆசிரியர் கழகம்,**
**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,**
**கந்தரோடை, சுன்னாகம்.**

---


உ
சிவமயம்


**எவறெஸ்ற் கல்வி நிலையம் - இணுவில்**
**ஆண்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும்**

காலம்: நாளை (12.01.2008) சனிக்கிழமை பி.ப.1.00 மணி
இடம்: இணுவில் அறிவாலயம்
தலைவர்: திரு.இ.பாலச்சந்திரன் (நிர்வாக இயக்குநர்)

* பிரதம விருந்தினர் திரு.இ.விக்னேஸ்வரன் (தலைவர், கணிதமும் புள்ளிவிவரவியலும், யாழ்.பல்கலைக்கழகம்)
* சிறப்பு விருந்தினர் திரு.சு.கணேசலிங்கம் (உதவிக்கல்விப் பணிப்பாளர், ஆங்கிலம், வலிகாமம்)
* கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.
* அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாக இயக்குநர்,
எவறெஸ்ற் கல்வி நிலையம், இணுவில.





**ஏழாலை தெற்கு (களபாவோடை)**
**அருள்மிகு வசந்த நாகபூசனி அம்பாள் தேவஸ்தானம்**
**மகோற்சவ விஞ்ஞாபனம் - 2008**

தேவஸ்தான மகோற்சவவிழா நிகழும் சர்வசித்து ஆண்டு மார்கழித் திங்கள் 27ஆம் நாள் (13.01.2008) ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10நாள்கள் வரை நடைபெற அன்னையின் திருவருள் கைகூடியுள்ளது.

**15.01.2008 தொடக்கம் 22.01.2008 வரை**
**விசேட உற்சவங்கள்**

கொடியேற்றம் - 13.01.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி
வேட்டைத்திருவிழா - 19.01.2008 சனிக்கிழமை
சப்பரத்திருவிழா - 20.01.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி
தேர்த்திருவிழா - 21.01.2008 திங்கட்கிழமை காலை 9.30 மணி
தீர்த்தத்திருவிழா - 22.01.2008 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி
(நாகபுஷ்கரணியில்)

அம்பிகை அடியார்கள் அனைவரும் இந்த மகோற்சவ காலங்களில் வருகை தந்து வழிபாடு செய்து அன்னையின் திருவருளை நிறைவாகப் பெற அன்புடன் வேண்டுகின்றோம்.

பத்து நாள்களும் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) இடம்பெறும்.

தேவஸ்தானம்.


### வலிகாமம் வலய தமிழ்த்தின விழா

யாழ்ப்பாணம், ஜன.11

வலிகாமம் கல்வி வலய தமிழ் மொழித் தின விழா நாளை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாள் அறக் கொடை நிதியாக வலயத்திற்கு வழங்கப்பட்ட தொகை 125 மாணவர்களுக்கு இவ்விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது. (202)


**இந்தியாவில் பிரிந்தாவன் கல்லூரியில் படியுங்கள்**

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

உயர் தரம் A/L 2 சித்திகளுடன்

பதிவுகள் இப்பொழுது நடைபெறுகின்றன

Company Secretarial Services (Pvt) Ltd.
SMS 011 - 4520270 Name & Address for details
Tel: 0777 317043 (சி/54884)



**தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை**

* பஞ்சாபித்துணிகள்
* பஞ்சாபிகள்
* ஸ்கேட் & பிளவுஸ்
* ரீசேட்

(சி/551033)

**பபு கொமினியூக்கேசன்**
இல. 50, ...





**புங்குடுதீவு மேற்கு- இறுப்பிட்டி**
**அரியநாயகன்புலம்**
**ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்**
**வருடாந்த பெருவிழா மகோற்சவம்**

13.01.2008 ஞாயிற்றுக்கிழமை மகோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

13.01.2008 ஞாயிறு முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றம்
20.01.2008 ஞாயிறு 1008 சங்காபிஷேகம் முற்பகல் 10 மணிக்கு
21.01.2008 திங்கள் மு.ப. 10 மணி தேர்
22.01.2008 செவ்வாய் மு.ப.10 மணி தீர்த்தம்

குறிப்பு: கொடியேற்றம், தேர், தீர்த்தம் ஆகிய தினங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து காலை 7.30 மணிக்கும் ஆலயத்திலிருந்து பிற்பகல் 3 மணிக்கும் போக்குவரத்துக்கு பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. விரும்பும் அடியார்கள் ஆலய பரிபாலன சபையினருடன் தொடர்பு கொள்ளவும்.

**ஆலயபரிபாலன சபையினர்.**
தொ.பே.: 2523.

(69967)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4ஆயிரம் பேருக்கு சி.டி.எம்.ஏ. வழங்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.11

குடாநாட்டில் இதுவரை 3ஆயிரத்து 600 பேருக்கு 'சி.டி.எம்.ஏ:' தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்கா ரெலிக்கொம்மின் வடபிராந்திய முகாமையாளர் வி.யோகேந்திரன் தெரிவித்தார்.

இதில் முதற்கட்டமாக இரண்டாயிரம் தொலைபேசி இணைப்புகளும் அடுத்த கட்டமாக ஆயிரத்து 600 தொலைபேசி இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் மேலும் 400 இணைப்புகள் வழங்கப்படவுள்ளன.

இவற்றைவிட மேலும் நான்காயிரம் பேருக்கு 'சி.டி.எம்.ஏ' தொலைபேசி இணைப்புகள் வழங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளது. இதற்கான தொலைபேசிகள் விரைவில் எடுத்துவரப்பட்டு விண்ணப்பித்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் வடபிராந்திய முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (50)

# நயினாதீவுப் பிரதேசத்தின் வீதிகள் பல 20 வருடங்களாக புனரமைக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜன.11

நயினாதீவில் பல வீதிகள் 20 வருடங்களுக்கு மேலாக மீள் புனரமைப்புச் செய்யப்படவில்லை. இதனால் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

நயினாதீவு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இவ்வீதிகள் நீண்டகாலம் புனரமைக்கப்படாமையால் மிகவும் சேதமடைந்து காணப்படுகின்றன.

நயினாதீவிற்கான சேவையில் ஈடுபடும் வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ், பிரதேச வீதிகள் சீரின்மையால் அடிக்கடி பழுதடைகிறது. இதனால் பொதுமக்களும் அரச ஊழியர்களும் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். நயினாதீவுக்கு ஒரேயொரு பஸ் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (202-95)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜன.11

கோப்பாய், வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயிலின் மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி காலை 8 மணிக்கு பக்தர்கள் எண்ணெய் காப்புச் சாத்துதலும் மறுநாள் மகாகும்பாபிஷேகம், மகாபிஷேகம் என்பனவும் நடைபெறும்.

எதிர்வரும் 23ஆம் திகதி மண்டலாபிஷேகம் ஆரம்பமாகி 45 தினங்கள் நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.11

கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (202)

# ஆலயங்களுக்கு அடுத்தவையாக மக்களுக்கு உயர்வான பணியாற்றுபவை பாடசாலைகளே

## வேலாயுதம் மகா வித்தியாலய நினைவுப் பேருரையில் ரவீந்திரன்

யாழ்ப்பாணம்,ஜன.11

பாடசாலைகள் சமய வளர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் நாட்டின் உயர்வுக்கும் பல்வேறு பணிகளை ஆற்றவேண்டிய மிக முக்கியம் வாய்ந்த நிறுவனங்களாகும். இந்தவகையில் ஆலயங்களுக்கு அடுத்தபடியான நிறுவனங்கள் பாடசாலைகளேயாகும். இதனை உணர்ந்து எமது முன்னோர்கள் பலர் சமூகப் பொறுப்புடன் சிறப்பாகச் செயற்பட்டு வந்துள்ளனர்.

இவ்வாறு பாராட்டுத் தெரிவித்துள்ளார் சட்டத்தரணி எஸ்.ரவீந்திரன்.

புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் நிறுவுநர் தின விழா அண்மையில் வித்தியாலய அதிபர் ஏ.ஜெகநாதன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசன் கலந்துகொண்டார்.

நிகழ்வில் நினைவுப் பேருரை நிகழ்த்தியபோதே சட்டத்தரணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

ஆறுமுகநாவலர், சேர் பொன். இராமநாதன், இந்துப் போர்ட் இராசரத்தினம் போன்ற பெரியார்கள் இந்துமத கலாசாரங்களைப் பேணவும் ஏழைச்சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு வழி வகுக்கவும் கல்வி நிறுவனங்களை நிறுவித் தொண்டாற்றி வந்தனர்.

அவர்களின் பணிகளினாலே உந்தப்பட்ட புலோலியூர் வைரமுத்து வேலாயுத பிள்ளை 1895ஆம் ஆண்டு இவ்வித்தியாலயத்தை இந்துசமய மறுமலர்ச்சிக்காக நிறுவினார். பல்கலைக்கழகப் பட்டதாரியான அவர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகக் கல்விப் பணியை ஆரம்பித்தவர். அக்காலத்தில் சைவ ஆங்கிலப் பாடசாலையின் அவசியம் குறித்து பிறந்த குழந்தையே இவ்வித்தியாலயம்.

அன்றைய சமூகச் சூழலில் பணம் படைத்த செல்வச் சிறார்களே ஆங்கிலமொழி மூல உயர்கல்வியைப் பெறும் வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். விவேகம் நிறைந்த வறிய மாணவர்கள் பலர் மதம் மாறி கிறிஸ்தவக் கல்லூரிகளில்தான் உயர்கல்வியைப் பெறமுடியும் என்றிருந்த துர்ப்பாக்கிய நிலையை நீக்க இவ்வித்தியாலயம் வழி வகுத்தது.

ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேலாகக் கல்விப்பணியாற்றிச் சிறந்த சாதனைகளை நிலைநாட்டியுள்ளது புலோலி வேலாயுதம் மகா வித்தியாலயம்.

1961ஆம் ஆண்டு இவ்வித்தியாலயத்தை அரசு பொறுப்பேற்றது. இவ்வித்தியாலயம் புகழ் மிக்க பல்துறைசார் நிபுணர்களையும் கொடையாளிகளையும் ஆன்மீக ஞானிகளையும் விளையாட்டு வீரர்களையும் உருவாக்கியுள்ள தென்றால் அவையெல்லாம் நிறுவுநர் வேலாயுத பிள்ளையின் நோக்கத் திற்கும் இலட்சியத்திற்கும் கிடைத்த பெரு வெற்றியாகும். இவ்வித்தியாலயம் தொடர்ந்தும் சிறப்பாக இயங்கி மேலும் சாதனைகள் புரிய இறையருள் கிடைக்கவேண்டும் - என்றார். (202-160)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வாகன வரி அனுமதிப்பத்திரம் விநியோகம்

வலி.தென்மேற்கு,ஜன.11


வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்தில் இவ்வாண்டுக்கான மோட்டார் வாகன வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் பணி இவ்வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்திலும் பார்க்க இவ்வருடம் அனுமதி பத்திர வரிக் கட்டணங்கள் அதிகரிக்கப்படிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பிரகாரம் மோட்டார் சைக்கிள்களுக்கு 400 ரூபாவும் உழவு இயந்திரத்திற்கு 400 ரூபாவும் அறிவிடப்பட்டு வருகின்றது.

இதேவேளை - ஆட்டோ ஒன்றிற்கு 500 ரூபா வரிக்கட்டணமாக அறிவிடப்பட்டு வருகின்றது. லொறி மற்றும் மோட்டார் வாகனங்களுக்கு அவற்றின் நிறை, எரிபொருள் பாவனையின் தன்மை ஆகியவற்றை அடிப்படையாக் கொண்டு வரிக் கட்டணம் அறிவிடப்படுகின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னர் வரி அனுமதிப் பத்திரம் பெறுபவர்களுக்கு தண்டப்பணம் அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (202-135)



யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் நிலையத்தின் இணைப்பாளர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை எழுதிய 'சித்திரிப்பு எழுத்துக்கள் ஓர் அறிமுகம்' என்னும் நூலின் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்.பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்.மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதலிரு படங்களிலும் -

யாழ்.ஆயர் நூலை வெளியிட்டு வைக்க யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பெற்றுக்கொள்வதையும் நூலாசிரியரையும் மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: தேசன்)*

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஜன.11

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 5 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி எ.எல். விளையாட்டுக் கழகம்.

* சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்துடனான போட்டியொன்றும் நடைபெறவுள்ளது. (202-86)

# ப.நோ.கூ. சங்கங்கள் ஊடாக பொங்கல் பொருள்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன.11

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பொங்கல் பொருள்களைப் பாவனையாளர்களுக்கு விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிவப்பு தீட்டல் அரிசி, சர்க்கரை, பயறு, கஜூ, பிளம்ஸ் போன்ற பொங்கல் பொருள்களே விநியோகிக்கப்படவுள்ளன. (202-224)

# காரைநகர் வைத்தியசாலைக்கு புதிய தொலைபேசி இணைப்பு

காரைநகர் பிரதேச வைத்தியசாலைக்குக் கடந்த முதலாம் திகதி தொடக்கம் 'சிடிஎம்ஏ' தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்த 021 222 5556 என்னும் இலக்க முடைய தொலைபேசி பழுதடைந்த காரணத்தால் 060-221-6574 என்னும் இலக்கமுடைய 'சிடிஎம்ஏ' இணைப்பு வழங்கப் பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலை அரசினர் வைத்தியசாலையாக இருந்து பிரதேச வைத்தியசாலையாக அண்மையில் தரம் உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-29)

# சுத்தமான பால் உற்பத்தியும் விற்பனையும் தொடர்பாக சுகாதார நடவடிக்கைகள்

பாலானது எமது பிரசேத்தில் சாதாரண மக்களால் பயன்படுத்தப்படும் ஓர் உணவுப் பொருளாகும். இப்பாலை நுகர்வோர் பெற்று பயனடையும்போது, அப்பொருளின் துப்பரவுத் தன்மை பற்றி யாரும் அக்கறைப்படுவது கிடையாது. மனிதரால் பாவிக்கப்படும் ஒவ்வொரு பொருளும் நுகர்வோர் பாவனைக்கான அங்கீகாரம் பெற்றிருப்பது அவசியமாகிறது. இந்தவகையில் பாலும், பால் உற்பத்தி பொருள்களும் இதற்குரிய அங்கீகாரம் பெறப்பட்டு விற்பனை செய்யப்படுகிறதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இந்த அங்கீகாரம் வழங்குவதில் முக்கிய பொறுப்பு நுகர்வோரில் தங்கியுள்ளது. தரமற்ற, துப்பரவற்ற நிலையங்களில் விற்பனை செய்யப்படும் பால், எவ்வளவு தூரம் மக்களால் நோக்கப்படுகிறது? எனவே நுகர்வோர் தாம் பெறும் பாலின் தரத்தை, முடியுமான வரையில் பின்வரும் முறைமைகள் மூலம் அவதானிக்கமுடியும்.

1. பால் உற்பத்தி செய்யும் விலங்கின் சுத்தம்
2. பால் கறத்தலின்போது படிச்சுத்தம்
3. பால் கறக்கும் இடத்தின் சுத்தம்
4. பால் எடுப்பதில் சுத்தம்
5. பால் கறப்பின்போது பாவிக்கும் பாத்திரத்தின் சுத்தம்

என்பன பண்ணை மட்டத்தில் நடைமுறைப்படுத்த வேண்டிய சுகாதார நடவடிக்கைகளாகும்.

*வீடுகளில் பால் பெற்றுக்கொள்பவராக இருப்பின்:*

1. பால் விற்பனை செய்பவரின் சுத்தம்
2. நோயால் பீடிக்கப்பட்டிருந்தால் (இருமல், சருமநோய்)
3. ஒடுக்கமான, மூடியுள்ள பிளாஸ்ரிக் 'கான்'களில் பால் விற்பனை செய்தல்
4. விற்பனை செய்யப்படும் போத்தலின் சுத்தம்

என்பவற்றை அவதானித்தல் நுகர்வோர் கடமைகளில் ஒன்றாகும்.

*பால் விற்பனை நிலையத்தில் பால் பெறுபவராயின்:*

1. பால் கொண்டு வருவதில் சுத்தம்
2. பால் விநியோகிக்கும், பெற்றுக்கொள்ளும் பாத்திரத்தின் சுத்தம்
3. பாற்சாலை நிலத்தின் சுத்தம்
4. நிலையக் கட்டடச் சுத்தம்
5. விற்பனையாளரின் சுத்தம்
6. பால பாத்திரத்தினை கழுவும் முறைமை
7. நீர் எடுக்கும் நிலையில் சுத்தம்

என்பன நுகர்வோரால் அவதானிக்கப் படவேண்டியதொன்றாகும்.

மேற்குறிப்பிட்ட நடைமுறைகளை முடியுமானவரை பின்பற்றினால், நாம் பாவிக்கும் பால் சுத்தமானதாகவும், நுகர்வோர் பாவனைக்கு அமைவாக எம்மால் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இந்நடைமுறையை பின்பற்றாதவிடத்து நுகர்வோர் உரிய நிறுவனங்களுக்கு, திணைக்களங்களுக்கு தெரியப்படுத்தினால் அதற் குரிய நடவடிக்கைகளை அந் நிறுவனங்கள் மேற்கொள்ள ஏதுவாக இருக்கும்.

டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லி கல்லூரி)

### பழையமாணவர் சங்கம் பொதுச்சபைக் கூட்டம்- 2008

காலம்: 27.01.2008 ஞாயிறு பி.ப.2.30 மணி
இடம்: கல்லூரி பிரதான மண்டபம்

சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது பங்கு பற்றி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*குறிப்பு:* 27.01.2008 அன்று தொடக்கம் நடைமுறைக்கு வரும் அமைப்பு விதிகளின் பிரகாரம் சங்கத்தின் புதிய செயற் குழுத் தெரிவு இடம்பெறும்.

எஸ்.ரி.பத்மநாதன்
தலைவர்

சி.சிவதாசன்
செயலாளர்

ஏ.ஜெயகுமார்
பொருளாளர்

(69968)

## அறுவடை நேரத்தில் அவரைப் போற்றுவோம்

காலபோக கதிர்முற்றி அறுவடை செய்து கதிரவனுக்குப் படைக்கும் முன்னே காலம் அறிந்து செய்த உதவியினை விவசாயிகள் நாம் நினைவு கூருவோம்.
காலபோக நெற்செய்கைக்கு உரிய நேரத்தில் மானிய உரத்தினையும் நல்ல விதை நெல்லையும் பெற்றுத் தந்ததாலேயே களனி எங்கும் கதிர் முற்றி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.
இதற்குக்காரணமான
விவசாய உதவி ஆணையாளர்
**பற்றிக் ரஞ்சன் அவர்களை**
மனதாரப் பாராட்டுவதுடன் விவசாயிகள் சார்பில் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இவரோடு இணைந்த சக உத்தியோகத்தர், உழியர்களுக்கும் இந் நன்றியும் பாராட்டும் உரித்தாகட்டும்.
இப் பணி தொடர வேண்டி நிற்கும்.

**மானிப்பாய் வடக்கு விவசாயிகள் சம்மேளனம்.**

(69976)

## IBMS

### கணனிக்கற்கைநெறிகள்

1. Dip. in Microsoft Office
2. Dip. in DeskTop Publishing
3. Dip. in Internet Technology
4. Dip. in Hardware Technology

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

பிரிவு I : 03.01.2008
பிரிவு II : 12.01.2008
பிரிவு III : 23.01.2008
காலை 10.00 மணி

Head Office: # 209, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 8060
Branches : • நே.ம.ம.வி வீதி, நெல்லியடி,
• சங்கத்தானை, சாவகச்சேரி.

## ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் பீடத்திற்கு அருகில் பட்டுப்போயுள்ள வேப்ப மரம் மற்றும் பல்கலைக்கழக களஞ்சியத்திலுள்ள பொதி செய்வதற்கு ஏற்ற வெற்று மரப் பெட்டிகள் என்பன 21.01.2008 திங்கட் கிழமை மு.ப.10.00 மணிக்கு ஏலத்தில் விடப்படவிருக்கின்றன.

இந்த ஏல விற்பனையில் கலந்து கொள்ள விரும்புவோர் 21.01.2008 அன்று மு.ப. 10.00 மணியளவில் நிர்வாகக் கிளைக்கு சமுகமளிக்கவும்.

வெற்றிபெறும் ஏலதாரர் முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே பொருள்கள் அப்புறப்படுத்த வேண்டும்.

*குறிப்பு:* வெற்றி பெறும் ஏலதாரரால் வேப்ப மரம் தறித்து அகற்றப்படல் வேண்டும்.


**பதிவாளர்.**

(சி/551039)

## ஐந்தாம் வருட நினைவலைகள்

### அமரர் சபாபதி நாராயணன்

(ஓய்வுபெற்ற கிராம சேவையாளரும், சமாதான நீதிவானும்)



அன்னையின் மடியில்
16.07.1943
ஆண்டவன் பாதத்தில்
11.01.2003

இதயத்தை இனிப்பாக்கியவரே
மரணத்திரை உங்களை மறைத்திடுமா?
இறுதி உனர்வலைப் பாதைகள் சோகச் சுமை
தாளாமல் நெளிய- நீங்கள்
சிதை சிம்மாசனத்தில்
சேர்ந்து விட்டீர்கள்
அந்த சுடுகாட்டுத் தீ
உம் உடலைச் சுட்டது
இன்று எமது உயிரைச் சுட்டது
ஒரு சூனியம் எம்மை சுற்றிக் கொண்டது.

பிள்ளையார் கோயிலடி,
வடலியடைப்பு.

**குடும்பத்தினர்.**

## தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கு அ.அ.அட்டை


யாழ்ப்பாணம், ஜன.12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலையில் தற்காலிக இணைப்புப் பெற்று கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு கல்வித் திணைக்கள அடையாள அட்டைகள் வழங்கப் படவுள்ளன.

அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் உடன் பெற்று விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
16 . 05 . 1919



உதிர்வு
12 . 12 . 2007

### திருமதி சங்கரன் வள்ளி

கடந்த 12.12.2007 அன்று காலமான எங்கள் குடும்ப விளக்கின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எம்மோடு துயர்பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் பல வழிகளிலும் உதவியோர்க்கும், உள்ளூர், வெளியூர் களிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (11.01.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன்/ அழைக்கின்றோம்.

மருதங்குளம் வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(69973)

**குடும்பத்தினர்.**

## HND

OPENED FOR WORKERS ON *WEEKENDS*

*Application for the January 2008 Intakes are opened*

Obtain a world class British Qualification

*Courses offered for this academic year:*

- *HND in Software Engineering*
- *HND in Computing*
- *HND in Business Information Technology*



*Delivered locally.....*
*Recognized globally...*
*Edexcel's unique combination of knowledge, resources and innovation drives educational change and inspires people everywhere to achieve their educational and Professional goals.*

தொழில்புரிவோர் மற்றும் தொழில்தேடுவோர் உங்களிற்காக இப்புதுவருடத்தில் வார இறுதி நாட்களில் மேற்படி HND கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம். உங்கள் தரத்தையும் தகைமையையும் உயர்த்திக்கொள்ள இவ்வரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**IIS CITY CAMPUS**
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8080 Fax: 222 6933 Web: www.iiscitycampus.net

## மரண அறிவித்தல்

### இராஜவல்லவன் இராஜசிங்கம்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜவல்லவன் இராஜசிங்கம் 01.01.2008 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜவல்லவன் -யோகமலர் தம்பதியரின் அன்பு மகனும் விஜயராணி பசுபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி -கனடா), இராஜயோகன் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர், மானிப்பாய், சில்லாலை தெற்கு), திருமதி றஜனி சிவகுருநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை மற்றும் சதாலட்சுமி (பூமா), சிவகுருநாதன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நாளை (12.01.2008) சனிக்கிழமை லண்டன் நேரப்படி மு.ப. 11 மணியளவில் (**Cutal Senitorium London**) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*திருமதி வி.பசுபதிப்பிள்ளை (கனடா),*
இ.இராசயோகன் J.P.,
சி.றஜனி *(கனடா)*
*(சகோதரர்கள்)*
கனடா: 001-416-2924109.

*இ.இராசயோகம் J.P.,*
*சங்கரப்பிள்ளை வீதி,*
*மானிப்பாய்.*
*021 222 3296.*

(69970)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் சிலவற்றின் உயர்தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.11

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்திய டைந்த மாணவர்களின் பெறுபேறுகளை பாடசாலைகளின் அதிபர்கள் உதயனுக்கு அனுப்பிவைத்துள்ளனர். அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்ட முடிவுகள் வருமாறு-

**கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.**

*கலை:* ந.புஸ்பம் - 3ஏ, தி.துஷ்யந்தினி - 2ஏபி, வி.தாட்சாயினி - 2ஏசி, செ.சிறிகாந்தன் - 2ஏசி, ம.பிரிந்தா - ஏ2பி, த.தவஜீவிதன் - ஏ2பி, ச.சிவறஞ்சினி - ஏ2பி, லோ.நிசாலினி - ஏபிசி, த.சஞ்சீவன் -ஏபிசி.

**வடமராட்சி கிழக்கு அம்பன் அ.மி.த.க. பாடசாலை**

*கலை:* எஸ்.நிலோசன் - 3ஏ, வி.கோசலா - 2ஏபி, பி.பிரதீபா - 2ஏபி, ரீ.ஜங்கரதீபன் - 2ஏபி, ரீ.மேரிசுதர்சினி - ஏபிசி, என்.வினோதா - ஏபிசி, எஸ்.கயல்விழி - ஏபிசி, எஸ்.சுகன்யா - ஏ2சி, எஸ்.வினோதினி - 2பிசி, ரீ.பிரதீபா - 2பிசி, ஏ.கஜிதா - 2பிஎஸ், ஆர்.ஜெயசுருபன் - பி2சி, கே.காஞ்சனா - பி2சி, ஆர்.மேரிசியாழினி - பிசிஎஸ், வீ.யசோதா - 3சி, எஸ்.கல்யாணி - 3சி, கே.யாழினி -சி2எஸ்.

**உரும்பிராய் இந்துக் கல்லூரி**

*வர்த்தகம்:* இ.ஆனந்தகுமார் - ஏபிசி, சி.வினோதா - 2பிசி,

*கலை:* கோ.துஷாந்தினி - 2ஏசி, பே.ரேகா - ஏ2பி, க.தர்சனா - 3பி, யோ.நஜிதரன் - ஏபிசி, ஜெ.ஜெயாளினி - ஏபிசி, ந.லோகனா - ஏ2சி, ப.ஜெயபாரதி - ஏபிசி, த.பத்மஜெனனி - ஏசிஎஸ்.

**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி**

*கணிதம்:* கே.சஞ்சீவன் - 3ஏ, பி.கிருபாயினி - 2ஏபி, பி.கஜந்தன் - 2ஏசி, ஆர்.ரகுராம் - ஏ2சி, எஸ்.சரண்ராஜ் - பி2சி

*விஞ்ஞானம்:* எஸ்.கிரேகா - 2பிசி, எஸ்.சௌதாமினி - 3சி, என்.வாசுகி - 3சி,

*வர்த்தகம்:* எஸ்.ஸ்ரீரமணம் - 2ஏபி, கே.சயந்தா - ஏ2பி.

*கலை:* வி.மகேஸ்வரன் - 2ஏபி, பி.சுபாகரன் - 2ஏசி, எஸ்.தனுஜா - 2ஏசி, எஸ்.ஜனார்த்தனன் - 3பி, எஸ்.கோகில வாணி - ஏ2பி, பி.சுபித்திரா -ஏபிசி, பி.பகிர்பரன் - 2ஏசி, எஸ்.விஜயகுமார் - ஏ2பி, எஸ்.கிருஷ்ணாநந்தினி - ஏபிசி. எஸ்.மோகனப்பிரியா - 2பிசி.

# கொழும்பு புறநகர்ப் பகுதியில் குண்டுச் சத்தங்களால் பதற்றம்

கொழும்பு, ஜன.11

கொழும்பின் புறநகர்ப் பகுதியான களனிமுல்ல என்ற இடத்தில் கடந்த புதனன்று காலை கேட்ட பாரிய குண்டுச் சத்தங்களால் மக்கள் பதற்றம் அடைந்தனர்.

அங்கொடை, களனிமுல்லவில் அமைந்திருக்கும் படைமுகாமில் படை அணி ஒன்றுக்கு கடந்த இரண்டு மாதங்களாகப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வந்தன. அதன் இறுதிநாளான நேற்றுமுன்தினம் காலை சுமார் 8 மணியளவில் இடம்பெற்ற உத்தியோக பூர்வ வைபவத்தின்போது பீரங்கிகள் வெடிக்க வைக்கப்பட்டன என்று கூறப்பட்டது.

இக்குண்டுச் சத்தங்களால் அப்பகுதி அதிர்ந்தது.


ராஜகிரிய, கொலன்னாவ மற்றும் அங்கொடைப் பகுதிகள் வரை குண்டுச்சத்தம் கேட்டதால் அப்பகுதி மக்கள் பதற்றம் அடைந்தனர்.

களனிமுல்ல பகுதி படைமுகாமில் இடம்பெற்ற பயிற்சிகளை ஒட்டியே குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன என்பது தெரியவந்ததை அடுத்து பதற்றம் தணிந்தது. (சி)



அமெரிக்கா ஹவாய் ஆதீன மகா சந்நிதானத்தில் நடைபெற்ற பஜனை வழிபாட்டின் போது எடுக்கப்பட்ட படம்.

அமெரிக்கத் துறவி வேலோன் சுவாமிகள் மற்றும் சுவாமிகள் நடத்திய பஜனையில் பரோபகாரமணி கே.கே.சுப்பிரமணியமும் காணப்படுகின்றார்.



தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 155ஆவது ஜயந்தி தின நிகழ்வுகள் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெற்றன.

அந்நிகழ்வில் அன்னைக்கு பூஜைகள் நடைபெறுவதைப் படத்தில் காணலாம்.

# ஓட்டோவின் மீது பொலிஸார் சூடு! தமிழ் இளைஞர் பலி: ஒருவர் காயம்

## கண்டி பலகொல்லவில் செவ்வாய் இரவு சம்பவம்

கொழும்பு,ஜன.11

கண்டி நகரிலிருந்து தென்கிழக்கே சுமார் 19 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பலகொல்லப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவில் பொலிஸாரின் வழிமறிப்பை மீறிச் சென்றதாகக் கூறப்படும் ஒட்டோ ஒன்றின் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் தமிழ் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொரு இளைஞர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர் மலையகப் பகுதியைச் சேர்ந்த தினேஸ்குமார் (வயது 25) என்றும், காயமடைந்தவரும் மலையகப் பகுதியைச் சேர்ந்த இராமசாமி இராமராஜ் (வயது 28) என்றும் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

காயமடைந்தவர் கண்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணையை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

# புலிகளின் மட்டு. மாவட்டப் பொறுப்பாளர் பலி

கொழும்பு,ஜன.11

மட்டக்களப்பு மாவட்டம் சவுக்கடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் விசேட அதிரடிப் படையினர் நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகளின் மாவட்டப் பொறுப்பாளர் சங்கர் கொல்லப்பட்டிருக்கிறார் என்று தேசிய ஊடக பாதுகாப்பு மையம் தெரிவித்தது.

மாவட்ட பொறுப்பாளரின் மறைவிடத்தை விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்த வேளை அவர் கிரனேட் வீசிவிட்டுத் தப்பியோட முற்பட்டபோது அதிரடிப் படையினரால் சுடப்பட்டார் என்றும் -

கொல்லப்பட்டவரிடமிருந்து பிஸ்டல் ஒன்றும் கிரனேட்டும் மீட்கப்பட்டன என்று ஊடக மையம் மேலும் தெரிவித்தது. (சி)

# 2008 இல் உங்களது பலன்கள்...



## துலாம்

இந்தப் புத்தாண்டில் உங்கள் ஆசைகளும், எண்ணங்களும் பல விஷயங்களில் விரிவடையும். குடும்ப ஸ்தானாதிபதி சுப பலத்தால் குடும்பத்தினிடையே இணக்கங்களைக் காண்பீர்கள். அனைவரும் உங்களை அனுசரித்துச் செல்வார்கள்.

குடும்பத்தினரின் எண்ணங்களிலும், மனதிலும் இருந்த தவறான கண்ணோட்டங்களை உங்களின் தெளிந்த பேச்சுகளால் மாற்றி, குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கக் காண்பீர்கள்.

உங்கள் திட்டங்களை தெளிவான முடிவுடன் செயலாற்றுவீர்கள். உங்களுக்குப் பாதுகாவலாக இருந்தவர்கள், உங்களுக்கு மேலும் அரணாக இருக்க விரும்புவார்கள். அதனால் உங்கள் எண்ணங்களை அவர்களுக்கு முன்கூட்டியே தெளிவுபடுத்தவும்.

லாப ஸ்தானத்தில் உள்ள சனி பகவான் உங்களின் பஞ்சமாபதியாகி, குருபகவானாலும் பார்க்கப்படுகிறார்.

அதுபோல் உங்கள் செயல்கள் பல மடங்கு இலாபத்தைத் தேடித்தரும் என்றால் மிகையாகாது. அதனை விரயம் செய்யாமல் வருங்காலத்திற்காகச் சேமித்து வைத்துக்கொள்வீர்கள்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு உங்கள் நண்பர்கள், நீங்கள் அறியாமலேயே சில சதித்திட்டங்களில் உங்களையும் ஒருவராக இணைக்க முற்படுவார்கள். அதனால் அவர்களுடன் உள்ள நட்பை, தாமரை இலை தண்ணீர் போல ஒட்டியும் ஒட்டாமலும் வைத்துக்கொள்ளப் பழகிக்கொள்ளுங்கள்.

இந்தபுத்தாண்டில் நீங்கள் எவரையும் முழுமையாக நம்பாமல், அறிவால் சோதனை செய்து நடந்துகொள்ளவும் மற்றபடி எதற்காகவும் மனம் துவண்டு விடாமல் மகிழ்ச்சியுடன் இந்தப் புத்தாண்டில் இருப்பீர்கள் என்று கூறமுடிகிறது.

உத்தியோகஸ்தர்களுக்கு படிப்படியாக வேலைச்சுமை குறையும். விரும்பிய இடமாற்றங்களை பெறுவீர்கள். உங்கள் வேலைகளை செவ்வனே செய்து முடித்து நற்பெயர் எடுப்பீர்கள். உங்களின் பதற்றமில்லா காரியம் மற்றும் திறமைகளை சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

வியாபாரிகள் பொறுமையுடன் செயற்பட்டு, வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். இருப்பினும் மறதி காரணமாக வரவு- செலவுகளில் குறை உண்டாகலாம். இதனால் சிறிது நஷ்டங்களுக்கும் ஆளாக நேரிடும். எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்துச் செய்யவும். புதிய முதலீடுகளில் ஈடுபட வேண்டாம்.

விவசாயிகள் தங்கள் தொழிலில் மட்டுமே கவனம் செலுத்தவும். ஏனெனில் உங்கள் முயற்சிகள் சிறிய தடங்கல்களைச் சந்திக்க நேரிடும். விளைச்சல் குறைய வாய்ப்பு உள்ளதால், மாற்றுப்பயிர்களை உற்பத்தி செய்து பலன்பெறலாம்.

இந்த ராசி கலைத்துறையினர் திறமைக்குத் தகுந்த வளர்ச்சியைக் காண்பார்கள். தொழிலில் எதிர்பார்த்த மாற்றங்கள் தென்படும். விருந்து, சமூகத்தில் மதிப்பு, மரியாதையை அதிகரித்துக்கொள்வீர்கள்.

பெண்மணிகளுக்கு குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும். உற்றார், உறவினர்கள் உங்களை அணுகிப்பயன் பெறுவார்கள். அனைவரிடமும் விட்டுக் கொடுத்து நடந்துகோண்டு குழப்பங்களை தவிர்க்கவும்.

மாணவமணிகளைப் பொறுத்த வரையில் படிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். கடுமையாக முயற்சி செய்து, எந்தத் தடையையும் உடைத்து வெற்றி வாகை சூடுவீர்கள். உங்களின் வருங்காலக் கனவுகளும் திட்டங்களும் உழைப்பிற்கு ஏற்றவாறு பலிக்கும்.

# மனத்தூய்மை நாடும் பிரார்த்தனை தேவை

மனதில் எழுகின்ற ஒவ்வொரு விருப்பமும் மலராத ஒரு பிரார்த்தனைதான்.

விருப்பமும் ஆசையும் தேவையும் இல்லாத மனிதனே இல்லை. எனவே பிரார்த்தனை செய்யாதவர்களும் இல்லை.

ஆனால் அந்த விருப்பங்களும் ஆசைகளும் தேவைகளும் இறைவனிடம் சமர்ப்பிக்கப்படும் போதுதான் அது உண்மையில் பிரார்த்தனை என்ற பெயர் பெறுகிறது.

அப்படியானால், தெய்வச்சந்நிதியில் நின்றுகொண்டு 'இறைவா, நான் இதை விரும்புகின்றேன்', 'எம்பெருமானே, எனக்கு அது வேண்டும்' என்று சொல்லி விட்டால் உடனே அது பிரார்த்தனை ஆகிவிடுமா? அது நிறைவேறிவிடுமா?

இதற்கு விடை காண நாம் பல விஷயங்களைச் சிந்திக்கவேண்டியுள்ளது.

தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே பிரார்த்தனை; மனிதனின் தேவைகள் இரண்டு வகையானவை.

ஒன்று, அன்றாட வாழ்க்கைக்கான தேவைகள், பணம் வேண்டும், நோய் குணமாக வேண்டும், பிள்ளை வரம் வேண்டும், திருமணம் நடைபெற வேண்டும், சிக்கலிலிருந்து விடுபட வேண்டும், வழக்கில் வெல்லவேண்டும், தேர்தலில் வெற்றி பெற வேண்டும், தேர்வில் நல்ல மத் பெண் பெற வேண்டும். அது வேண்டும், இ வேண்டும் என்று மனிதனின் தேவைகளு ஆசைகளும் கொஞ்ச நஞ்சமல்ல. இவற்றிற் கா தெய்வத்திடம் பிரார்த்திப்பது ஒரு வகை. இது சாதாரண பிரார்த்தனை.

ஆசைகள் நிறைவேற நிறைவேற புறப்பொருள்களால், வாழ்க்கையின் சுக போகங்களால் நிம்மதியைத் தரமுடியாது, சந்தோஷத்தைத் தரமுடியாது என்ற உண்மை இன்னும் ஆழமாக நமக்குத் தெரிய வரும்.

'இந்த உலகம் தான் எல்லாமா? இதற்கு மேல் எதுவும் இல்லையா?'' என்ற கேள்வி அப்போது பிறக்கும்.

யாருடைய மனதில் இந்தக் கேள்வி இதய ஆழங்களிலிருந்து எழுகின்றதோ, அவன் உயர் வாழ்க்கையை நாடுகிறான், இறைவனைத் தேடுகிறான்.

இது இரண்டாவது வகையான தேவை. அவனும் இறைவனை பிரார்த்திக்கிறான்; 'இறைவா, நான் உண்மையை உணரவேண்டும், மனத்தூய்மை வேண்டும், பக்திவேண்டும், ஞானம் வேண்டும். உனது திருக்காட்சி வேண்டும் என்றெல்லாம் அவரை வேண்டுகிறான். இது ஆன்மீக பிரார்த்தனை.

ஆன்மீகப் பிரார்த்தனை சாதாரண பிரார்த்தனையைப் போல் சிக்கலானது அல்ல. பிரார்த்தனை என்பது நமது ஆசைகள், நமது உணர்ச்சிகள் என்றெல்லாம் நமது மனம் சம்பந்தமானது. எனவே, மனத்தூய்மை வேண்டும், மனத் தெளிவு வேண்டும், பக்தி வேண்டும்' என்றெல்லாம் நாம் பிரார்த்தனை செய்யும்போது அவை நிறைவேற்றுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாக உள்ளன.

இந்த ஆன்மீகப் பிரார்த்தனை தான் உயர்வாழ்க்கை அல்லது ஆன்மீக வாழ்க்கையின் முதற்படியாக அமைந்துள்ளது.

(நன்றி:ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் க.அருமைநாதன்



மலர்வு 17.12.1952 உதிர்வு 12.12.2007

எங்கள் குலவிளக்கே!
எம்மை விட்டுச் சென்று
ஓர் திங்கள் ஆனதையா!
உம் நினைவுகள் எம்
நெஞ்சில் கல்மேல்
எழுத்துப் போல்
ஆனதையா!

இன்று (11.01.2008) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(69942)

## வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்வியாண்டு 2008/2009

யாழ்., பேராதனை பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான
* கலை முதற்தேர்வு (G.A.Q)
* வர்த்தக முதற் தேர்வு (First in Commerce)

க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி. பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். விரிவுரைகள் 12.01.2008இல் ஆரம்பமாகின்றன.

விவரங்களுக்கு : இயக்குநர்,
பட்டப் படிப்புகள் கல்லூரி,
57/18, ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக), யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 060 221 6628

## அபிவிருத்தி உதவியாளர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை

குருநகர், ஜன.11

அபிவிருத்தி உதவியாளர் மற்றும் அதனை ஒத்த சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறமை காண் தடைதாண்டல் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தேசத்தைக் கட்டியெழுப்புதல் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தலை விடுத்துள்ளார் என யாழ்.மாவட்ட செயலக திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

இப்பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(202-51)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 . 03 . 1963

உதிர்வு 12 . 01 . 2005

### திருமதி கருணாவதி நாகராசா

(பரிசாரகர், யாழ்.போதனா வைத்தியசாலை)

திதி: 11.01.2008 திருதியை

பிள்ளையார் கோயிலடி,
கைதடி கிழக்கு.

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

(69934)

## நீங்காத நினைவுகள்

பதினேழாம் ஆண்டு | முதலாம் ஆண்டு





அமரர் கந்தசாமி ஞானசுந்தரம் திருமதி ஞானசுந்தரம் மகேஸ்வரி

மலர்வு: 05.04.1907 உதிர்வு: 17.05.1991

மலர்வு: 03.07.1924 உதிர்வு: 23.12.2006

திதி: திருதியை 11.01.2008

எங்கள் உயர்வுக்கு வழிகாட்டிட அன்புத் தெய்வங்களே
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

461, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(69963)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 26 . 06 . 1942

ஆண்டவன் அடியில் 02 . 12 . 2007

### திருமதி அந்தோனிப்பிள்ளை அருள்சீலி

அம்மா எமக்கு நீ வேண்டும்
ஆறுதலுக்கு உந்தன் மடி வேண்டும்
சொந்தமென்ன பந்தமென்ன- அம்மா
உந்தன் அன்பிற்கிணையாகுமோ...

'அந்தை இல்லம்',
லோட்டன் வீதி, மானிப்பாய்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(69943)

## ஈரவிழிகளுடன் ஈராண்டில்...



கண்களிலே ஊற்றெடுக்கும் கண்ணீரில் உந்தன்
கனிந்தமுகம் தோன்றிவரக் கண்விழிக்கின்றோம்
துயரத்தின் உயரத்தில் எமைத் தவிக்கவிட்டு
வானுலகம் சென்றிடினும் உந்தன் முகமே
அண்டவெளியாய் மனசெல்லாம் பரந்து நிற்கிறது
விதியழைக்கும், விம்மியழும் காலம் ஒருநாள்
மண்ணில் வரும் என்று சிறு கனவு கூட
மனத்திரையில் வீழ்ந்ததில்லை- அம்மா
அன்புமிகு ஜெகதாவே! இதயம் எங்கும் நீ சுமந்த
ஆசைகளை நிறைவு செய்தோம்- அமைதி கண்டோம்
பண்புமிகு ஜெகதாவே! ஆண்டிரண்டு பயணித்து
முடிந்ததம்மா! உன் பாச ஆத்மா
வரத விநாயகன் பாதம் பற்றி நின்று
செம்மையுடன் சாந்திபெற வேண்டுகின்றோம்.

தெ.நிஷாந்தன்,
145/3, பிரப்பங்குளம் லேன்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222-8169

நித்தம் நின் நினைப்பில்:
குடும்பத்தினர்.
நா.தெட்சணாமூர்த்தி.

(69559)

ஊரொழு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட

### திருமதி தெட்சணாமூர்த்தி ஜெகதாம்பிகை

அன்னை மடியில்: 23.02.1951 ஆண்டவன் அடியில்: 02.01.2006

திதி: வளர்பிறை திருதியை 11.01.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மாகாணசபை எனும் மாயமான்!

'மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாக' முடிந் திருக்கின்றது அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் செயற்பாடு.

சுமார் ஒன்றரை வருடத்துக்கும் மேலாக - ஐம்பதுக்கும் அதிக - அமர்வுகளை நடத்திய பின்னர் 'பழைய குருடி கத வைத் திறவடி' என்பது போல 'பழைய கள்ளை புதிய மொத் தையில்' ஊற்றி எடுத்து வந்திருக்கிறது அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு.

தாம் ஆட்சிக்கு வந்தால் தென்னிலங்கைத் தரப்புகளுடன் முதலில் கலந்தாலோசனை மற்றும் பேச்சுகள் நடத்தி, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தென்னிலங்கையின் இணக்கப்பாட்டை மூன்று மாதங்களுக்குள் உரு வாக்குவார் என்றும் -

அந்த இணக்கப்பாட்டுடன் தமிழர் தரப்போடு பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண்பார் என்றும் -

இலங்கைத் தீவின் மக்களுக்கு தேர்தல் காலத்தில், தமது தேர்தல் விஞ்ஞாபனம் ஊடாக வாக்குறுதி அளித்தே மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவிக்கு வந்தார்.

மூன்று மாதங்கள் என்ற கணக்கு இரண்டு வருடங்களையும் தாண்டிய நிலையில் - ஜனாதிபதியின் பதவிக் காலத்தில் மூன்றில் ஒரு பங்கு முடிவுற்ற நிலையில் - இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு சிபார்சு செய்யும் அறிக்கை இதோ வரப் போகின்றது எனக் கட்டியங்கள் கூறப்படுகின்றன.

இந்தா வருகிறது, அந்தா வருகிறது என இழுத்தடிக்கப்பட்ட இந்த சிபாரிசுத் திட்டம் இம்மாத இறுதிக்குள் எப்படியும் வரும் என்று இப்போது கொழும்பில் உறுதியாகக் கூறப்படுகின்றது. அதை நம்புவோமாக!

சரி. 'லேட்' ஆக (காலம் பிந்தி) வந்தாலும் 'லேட்டஸ்ட்' ஆக (நவீனமாக) வந்தால் நல்லது என்று எதிர்பார்த்தால் கடைசியில் அந்த சிபாரிசும் 'லேட்' ஆனதாக (காலஞ்சென்றதாக) வருவதுதான் விசனம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் 1987 நவம்பரில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத் தத்தின் ஏற்பாடுகளை முழு அளவில் நடைமுறைப்படுத்தக் கோரும் சிபார்சைத்தான் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு இப்போது தனது முடிவாக முன்வைக்க வேண்டும் என ஜனாதிபதி அதை வழிப்படுத்தியிருக் கின்றார் என்றும், அந்த வழிகாட்டலை சிரம்மேல் ஏற்று அதையே தனது முடிவாக முன்வைக்க அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு சம்மதித்து விட்டது என்றும் கொழும்பு அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

அது உண்மையென்றால், சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் கொண்டு வரப்பட்டு, பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர் ஆழக் குழி வெட்டி நீளப் புதைக்கப்பட்ட - செத்துப்போன - திட்டத்தை மீண்டும் தோண்டி எடுத்துக்கொண்டு வருகின்றது அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு என்பதுதான் அர்த்தம்.

இத்தகைய திட்டம் கொண்டு வரப்பட்டால் - மீள நடைமுறைப்படுத்தப்பட்டால் - அதன் பெயரில் அதிகாரத்தையும், பதவி சுகத்தையும் அனுபவிக்கலாம் என்று கனவு காணும் சில தமிழர் தரப்புகள் இந்த யோசனைத் திட்டத்தில் சவாரிவிடும் எண்ணத்தில் - சந்தோஷ மிதப்பில் - திளைப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

இதே திட்டம் முன்னர் கொண்டு வரப்பட்டபோது, அதற்காக உயிரும், உதிரமும் கொடுத்து, இதனை 'மலை என நம்பி' ஆழமறியாமல் காலை விட்ட தமிழர் தரப்புகள், கடைசியில் இது உப்புச் சப்பற்ற வெறும் மாயா ஜாலம் - கானல் நீர் - என்பதைப் பட்டறிந்து - வேறு வழியின்றி தம்பாட்டில் - ஒருதலைப்பட்சமாக - 'தமிழீழப் பிரகடனம்' செய்து விட்டு நாட்டை விட்டு ஓடும் நிலைக்கும் அரசியல் அஞ்ஞாதவாசம் செய்யும் அவலத்துக்கும் தள்ளப்பட்டன என்பது கடந்த கால வரலாறு.

மாகாணசபை என்ற மாய மானை நம்பி களத்தில் இறங்கிய காரணத்தால் இன்னமும் அரசியல் அந்தகாரத்தில் இருந்து மீள முடியாத அவலத்துக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் தமிழர் தரப்புகளை முன்அனுபவப் பாடமாகக் கொள்வதே நல்லது.

சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான இந்தியத் துருப்புகள் இலங்கையில் நிலைகொண்டிருக்க, இந்தியத் தரப்பின் வலிமையான பின்புற ஆதரவுடன், பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்த ஏற்பாடுகளில் உள்ள அதிகாரப் பரவலாக்கலை தென்னிலங்கைச் சிங்களத்தைக் கொண்டு நடைமுறைப் படுத்த முடியாமல் போன வரலாற்றுப் பாடம் இருக்கத்தக்கதாக, அந்த மாகாணசபை என்ற ஏட்டுச் சுரைக்காயை நம்பி, சில தரப்பினர் தமிழர் பிரதிநிதிகள் என்று தங்களைக் கூறிக்கொண்டு, அந்தக் கானல் நீரைத் தேடிப் போகிறார்கள். இதே மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கி அதிவேக அரசியல் நீரோட்டத்தில் அள்ளுண்டு போன முதல்வர்களின் அனுபவம்தான் இவர்களுக்கும் நேரும் என்பதில் சந்தேகம் கொள்ள நியாயமில்லை.

அதுவும் தமிழர் தேசம் மீது கொடூரப் போரைத் தொடுப்பதற்கு சந்நதம் கொண்டு நிற்கும் தென்னிலங்கை அரசு, அதேசமயம், இருபது வருடங்களாக சட்டப்புத்தகத்தில் இருக்கத்தக்கதாகத் தான் நடைமுறைப்படுத்த மறுத்த - இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்புப் பிரசன்னத்துடன் கூடிய அழுத்தத்தின்போது கூட செய்யாமல் அடம்பிடித்த - அதிகாரப் பகிர்வை இப்போது விட்டுக் கொடுப்புத் தாராளத்துடன் வழங்க முன்வரும் என்று கனவு காண்பது அபத்தமன்றி வேறில்லை.

சர்வதேச சமூகத்தை ஏமாற்றுகின்ற - காலத்தை இழுத்தடிக்கின்ற - கொழும்பு அரசின் நாடகத்தில் இது மற்றோர் அங்கம். அவ்வளவே. சில தமிழர் தரப்புகள் இதற்குத் துணை போகின்றமை 'கோடரிக் காம்பு' வேலையன்றி வேறில்லை.

# உக்கிரமான தாக்குதல்கள் களமாக நான்காம் கட்ட ஈழப்போர் விளங்கும்

## 'த பொட்டம் லைன்' ஆங்கில வார ஏடு கட்டியம்

கொழும்பு, ஜன.11

பிரகடனப்படுத்தப்பட்ட நான்காம் கட்ட ஈழப்போர் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகும்போது உக்கிரத் தாக்குதல்கள் ஆரம்பமாகலாம் என்று கட்டியம் தெரிவித்திருக்கிறது ''த பொட்டம் லைன்'' ஆங்கில வார ஏடு. அரச படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளை குறைவாக மதிப்பிடக் கூடாது என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து வெளிவரும் இப் பத்திரிகை தனது பாதுகாப்பு நிலைவரப் பகுதியில் இதனைக் குறிப்பிட்டிருக்கின்றது.

அதன் முக்கிய பகுதிகள் வருமாறு-

நான்காம் கட்ட ஈழப் போரில் அரச விமானப் படையினரின் வான் தாக்குதல்களை முறியடிப்பதற்காக சோவியத் தயாரிப்பான இக்லா சாம் - 16 ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகளை விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்திருக்கின்றனர்.

கம்போடிய நாட்டில் இருந்து இத்தகைய ஏவுகணைகளைப் புலிகள் கொள்வனவு செய்ததுடன், உக்ரேய்னில் இருந்தும் அவை தருவிக்கப்பட்டுள்ளன.

193[illegible]ஆம் ஆண்டு சோவியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த ஏவுகணை தாழ்வாகப் பறக்கும் விமானங்களையும் மற்றும் ஹெலிகொப்டர்களையும் தாக்கும் திறன் கொண்டது.

அதனிடையே விடுதலைப் புலிகள் பெரும் தொகையான ஆயுதங்களையும் கொள்வனவு செய்திருக்கின்றனர்.

பல்கேரியா நாட்டில் இருந்து சாம் -14 மற்றும் டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள், உக்ரேயினில் இருந்து 20 தொன் ரி.என்.ரி, 35 தொன் சி-4 ரக வெடி மருந்துகள், சைப்பிரசிலிருந்து ஆர்.பி.ஜிகள், கம்போடியாவில் இருந்து சிறிய ரக ஆயுதங்கள், குரோசியாவில் இருந்து முப்பத்திரெண்டாயிரத்து 400 மோட்டார் ஷெல்கள் போன்ற ஆயுதங்களை வன்னிக்கு கொண்டுபோய்ச் சேர்த்துள்ளனர்.

-இவ்வாறு அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(சி)

# அமைதி முயற்சிகளிலிருந்து அனைத்துலக சமூகத்தை வெளியேற்றவே போர் நிறுத்த ஒப்பந்தம் ரத்து

## புலிகளின் முக்கியஸ்தர் கலைக்கோன் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜன.11

மேற்குலகத்தை அமைதி முயற்சிகளில் இருந்து வெளியேற்றி, சிங்களப் பேரினவாத சக்திகளின் அபிலாசைகளை நிறைவேற்றவே போர்நிறுத்த உடன்பாட்டில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ அரசு வெளியேறியுள்ளது- என்று லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவு ஆசிரியர் கலைக்கோன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற ''ஈட்டிமுனைகள்'' இசைத்தட்டு வெளியீட்டு நிகழ்வில் சிறப்புரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இம்ரான் - பாண்டியன் படையணி என்பது எம்து விடுதலைப் போராட்டத்தில் முக்கிய சமர்களில் முத்திரை பதித்துள்ளது.

இன்று எல்லோர் மத்தியிலும் ஒரு கேள்வி உள்ளது. போர்நிறுத்த உடன்பாட்டில் இருந்து விலகியுள்ள மஹிந்த ராஜபக்ஷ அரசு அடுத்து என்ன செய்யப் போகின்றது என்பதே அதுவாகும்.

மஹிந்த ராஜக்ஷ அரசுக்கும் ஒரு நிறைவேறாத கனவு இருக்கின்றது. கிழக்கில் தாம் பெற்றதாகக் கூறும் வெற்றிகள் மூலம் வடக்கிலும் வன்பறிப்புகளை மேற்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் போர்நிறுத்த உடன்பாட்டை தூக்கி எறிந்துவிட்டு, அமைதி முயற்சிகளில் இருந்து அனைத்துலக சமூகத்தை விலக்கிவிட்டு, சிங்களப் பேரினவாத சக்திகளின் அபிலாசைகளின்படி தமிழர்களை நசுக்க முயற்சிக்கின்றது.

தமிழர்களை பலமிழக்கச் செய்து, தமிழர்கள் பலவீனமான நேரத்தில் சிங்களப் பேரினவாதிகள் விரும்புகின்ற ஒரு தீர்வை தமிழர்கள் மீது திணிக்க மஹிந்த ராஜக்ஷ அரசு விரும்புகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ அரசின் விருப்பங்களுக்குப் போர்நிறுத்த உடன்பாடு இடையூறாக உள்ளது என்பதாலேயே போர் நிறுத்த உட்பாட்டை மஹிந்த ராஜபக்ஷ அரசு கிழித்தெறிந்து உள்ளது.

இந்தப் படையணி தொடங்கப்படுவதற்கு முன்னர் தேசியத் தலைவர் அவர்களின் மெய்க்காவலர் அணியாக செயற்பட்ட இம்ரான் - பாண்டியன் ஆகிய இரு தளபதிகளும் இந்தியப் படைக்கு எதிராகப் போராடியதுடன் தேசியத் தலைவரைப் பாதுகாக்கும் பணியிலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்தியப் படையினருடனான மோதலில் இரு தளபதிகளும் வீரச்சாவடைந்தனர். இந்த இரு தளபதிகளின் நினைவாக தேசியத் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்ட இம்ரான் - பாண்டியன் படையணி பல்வேறு சமர்களில் தனது பதிவுகளை ஆழமாகப் பதித்துள்ளது.

அந்தப் படையணின் சாதனைகளை வெளிப்படுத்தும் வகையில் 'ஈட்டி முனைகள்' இசைத்தட்டு வெளிவருவது மகிழ்வைத் தருகின் றது - என்றார் அவர்.

கிளிநொச்சியில் உள்ள பண்பாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை பிற்பகல் 'ஈட்டிமுனைகள்' பாடல் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது. (அ-50)

# பொங்கல் பண்டிகையை ஒட்டி மக்கள் வங்கியின் சேவை

யாழ்ப்பாணம்,ஜன.11

மக்கள் வங்கியின் யாழ்.மாவட்டக் கிளைகள் வாடிக்கையாளரின் நன்மை கருதி கொடுக்கல் - வாங்கல் சேவைக்காக பொங்கல் தினமான எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரை திறந்திருக்கும்.

இத்தகவலை வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் (வட வலயம்) த.க. ஆனந்தராஜா தெரிவித்தார்.

அன்றைய தினம் 'இசுறு உதான' சிறுவர் கணக்குகளை ஆரம்பிக்கும் 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு வங்கி 100 ரூபா வைப்பிலிட்டு கணக்குகளை ஆரம்பித்து வைக்கும் எனவும் -

'சிசு உதான' மாணவர் மலர்ச்சிக் கணக்குகளை ஆரம்பிக்கும் இவ்வருடம் தரம் 1 அனுமதிபெற்ற மாணவர்களுக்கு, அவர்கள் ஆரம்பிக்கும் தொகையின் அதே அளவுத் தொகையை - ஆகக்கூடியது 500 ரூபா வரை வங்கி வைப்பிலிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கூடிய தொகையை வைப்பலிடுபவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி - 27 | சனிக்கிழமை 12.01.2008 |
| நட்சத்திரம் : | சதயம் பின்னிரவு : 01.17 |
| திதி : சதுர்த்தி | பி.ப : 05.33 சதுர்த்தி விரதம் |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

# சாவகச்சேரி மருத்துவமனை பிரேத அறையை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஜன.11

சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனையின் பிரேத அறை புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரேத அறை வேலைகள் பூர்த்தியடைந்ததும் தென்மராட்சி பிரதேச மக்கள் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு சடலத்தைக் கொண்டு வரும் அவலநிலை நீங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

2000ஆம் ஆண்டு யுத்த அனர்த்தங்களினால் மருத்துவமனை, பிரேத அறை, பிரேத வண்டில் ஆகியவை சேதமடைந்தது. மருத்துவமனை 2002ஆம் ஆண்டு மீள இயங்கியது. எனினும் 7 வருடங்களாகப் பிரேத அறை புனரமைக்கப்படாதமையை 'உதயன்' சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (202-207)

# ஆசிரியர் கலாசாலைகளின் பரீட்சைகள்

அச்சுவேலி,ஜன 11

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளின் முதலாம் ஆண்டுப் பரீட்சையும் இறுதிப் பரீட்சையும் எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைகளுக்கான நேர அட்டவணையை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

பயிற்சி ஆசிரியர்களுக்கா முதலாம் ஆண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 19ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறும்.

இரண்டு வருடப் பயிற்சி முடிவில் நடைபெறும் இறுதிப்பரீட்சை 21ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் முதற்தடவையாக ''நீர் உயிர் வளமும் தொழில்நுட்பமும்'' பாடத்துக்கான பரீட்சையும் நடைபெறவுள்ளது.

இந்தப் பாடநெறியில் பயிற்சிபெறற ஆசிரியர்கள் முதலாம் ஆண்டுப் பரீட்சைக்கும் இறுதி ஆண்டுப் பரீட்சைக்கும் ஒரே தடவையில் தோற்றுவ தற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (202-11)

# இலங்கை முழுவதும் 733 பேர் காசநோயால் பீடிக்கப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம்,ஜன.11

இலங்கை முழுவதும் தற்போது 733 பேர் காசநோயால் பீடிக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளன.

கொழும்பு நாரஹேன்பிட்டியாவில் இயங்கும் மத்திய மார்புநோய் சிகிச்சை நிலைய தலைமைக் காரியாலயம் திரட்டிய புள்ளிவிவரங்களின் அடிப்படையில் இத்தகவல் வெளியாகியுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் 204 பேரும், யாழ் மாவட்டத்தில் 94 பேரும், கொழும்பு மாவட்டத்தில் 93 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 72 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 46 பேரும்-

அநுராதபுர மாவட்டத்தில் 26 பேரும், களுத்துறை, கல்முனை மாவட்டங்களில் தலா 22 பேரும், காலை மாவட்டத்தில் 19 பேரும், மட்டக்களப்பு, மாத்தறை மாவட்டங்களில் தலா 17 பேரும், மொனறாகல மாவட்டத்தில் 15 பேரும்-

பதுளை மாவட்டத்தில் 14 பேரும், பொலன்னறுவ மாவட்டத்தில் 13 பேரும், மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களில் தலா 11 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 9 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 8 பேரும், புத்தளம், வவுனியா, அம்பாறை மாவட்டங்களில் தலா 5 பேரும்-

காலி மாவட்டத்தில் 3 பேரும், கண்டி மாவட்டத்தில் 2 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவரும் காசநோயாளராகப் பதிவுசெய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் எவரும் பதிவுசெய்யப்படவில்லை எனவும் புள்ளி விவரம் மூலம் தெரியவந்துள்ளது. (202-300)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2007 உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்ற வியாபாரிமூலையூர் மாணவச்செல்வங்களை
## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**விமலநாதன் ரஜீவன்**
கணிதப்பிரிவு :- 3A
மா.நி. :- 01
தே.நி. :- 03




**சிவபாலன் நிரோசன்**
உயிரியல் பிரிவு :- 2A,B
மா.நி. :- 23



**பொன்னம்பலம் பாலச்சந்திரன்**
உயிரியல் பிரிவு :- A2B
மா.நி. :- 48



**ஆரணி சிவரத்தினம்**
கணிதப் பிரிவு :- A,2B
மா.நி. :- 57



**வைரவநாதன் கஜுந்தன்**
வர்த்தகப்பிரிவு :-A2B
மா.நி. :- 48



**கோகிலவாணி இரத்தினசபாபதிக் குருக்கள்**
கலைப்பிரிவு :- 3A
மா.நி. :- 35



**அபிராமி நல்லதம்பி**
கலைப்பிரிவு :- 2A,B
மா.நி. :- 24



**இராஜேஸ்வரன் சிறிகரன்**
கலைப்பிரிவு :- 2A,B
மா.நி. :- 78



**தாரணி தவத்துரைநாதன்**
கலைப்பிரிவு :-A,B,C

**தர்சினி அருளானந்தம்**
உயிரியல்பிரிவு :- 2B,C

**ரகுநாதன் றம்சிகா**
வர்த்தகப்பிரிவு :- A,B,C

**புஷ்பநாதன் செந்தீபன்**
கலைப்பிரிவு :- 2A,C

**சிந்துஜா ஜெயராஜா**
கலைப்பிரிவு :- A,2B

கலைமணி சனசமூக நிலையம், அறிவொளி கல்வி நிலையம்,
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், வசந்தம் கலைக்கூடம்,
விவசாய சம்மேளனம்.

வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

# விசாரணைக் குழுக்கள் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதம் எதிரணியினரின் எதிர்ப்பால் ஒத்திவைப்பு

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் விவாதத்திற்கு எடுக்கப்படவிருந்த - விசாரணைக் குழுக்கள் திருத்தச் சட்டமூலத்தை - எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்தமையால் அச்சட்டமூலம் விவாதத்திற்கு எடுக்கப்படாமல் பிற்போடப்பட்டது.

இதன் காரணமாக நேற்று முன்தினம் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறாமல் நாடாளுமன்றம் நேற்று காலை வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சட்டமூலம் ஆலோசனைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு உரிய முறையில் திருத்தங்கள் செய்யப்படவில்லை. அதை விடுத்து அதனை அவசர அவசரமாக விவாதத்திற்கு எடுத்துச் சட்டமாக்க அரசு முயற்சிக்கின்றது என்று குற்றம் சுமத்தியே எதிர்க்கட்சிகள் சட்டமூலத்தை எதிர்த்தன.

அமைச்சர் அமரசிறி தொடங்கொட நேற்று முன்தினம் காலை இச்சட்டமூலத்தை சபையில் விவாதத்திற்காக சமர்ப்பித்து உரையாற்றினார். அப்போது குறுக்கீடு செய்த ஐ.தே.கட்சியின் பிரதான கொறடா ஜோஸப் மைக்கல் பெரேரா அச்சட்டமூலத்தை எதிர்த்தார்.

ஆலோசனைச்சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு உரிய முறையில் திருத்தங்கள் எவையும் மேற்கொள்ளப்படாமல் இச்சட்டமூலம் அவசர அவசரமாகச் சமர்ப்பிக்கப்படுகின்றது. இதை விவாதிக்க நாம் அனுமதிக்க மாட்டோம். - என்றார் ஜோஸப் மைக்கல் பெரேரா.

இத்திருத்தச் சட்டமூலம் சட்டமாக்கப்படுவது காலத்தின் கட்டாய தேவையாக இருப்பதால் நாம் இதை அவசர அவசரமாகச் சட்டமாக்க முற்படுகிறோம் என்று அமைச்சர் டிலான் பெரேரா கூறினார்.

இச்சட்டமூலம் நெடு நாள்களாகக் கிடப்பில் போடப்பட்டிருந்தது. அந்நாள்களில் இதைச் சட்டமாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் இன்று அதை ஆலோசனைச் சபைக்குச் சமர்ப்பிக்காது அவசரஅவசரமாக நாடாளுமன்றுக்குக் கொண்டுவரும் அளவிற்கு என்ன தேவை - அவசரம் ஏற்பட்டுள்ளது? - என்று ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பினார்.

ஆலோசனைச் சபைக்குச் சமர்ப்பிக்காமல் - அதன் ஊடாகத் திருத்தங்களை மேற்கொள்ளாமல் - இதைச் சட்டமாக்க அனுமதிக்க முடியாது என்றும் விமல் வீரவன்ஸ மேலும் கூறினார்.

சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டமூலமும், விசாரணைக்குழுக்கள் சட்ட மூலமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருப்பவையாதலால் இரண்டு சட்ட மூலங்களையும் ஒன்றாக விவாதிப்பது நல்லது என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆலோசனை கூறினார்.

நீதி அமைச்சர் டிலான் பெரேரா அந்த ஆலோசனையை ஏற்க மறுத்துவிட்டார். விசாரணைக் குழுக்கள் சட்டமூலத்தை இன்றே ஆலோசனைச் சபைக்குச் சமர்ப்பித்து இன்றே மீண்டும் விவாதத்துக்குக் கொண்டுவருவோம் என்று டிலான் எதிர்க்கட்சிகளுக்கு ஆலோசனை வழங் கினார்.

அவ்வாறு இன்றே விவாதத்திற்குக் கொண்டுவர முடியாது என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

இதனால் நாடாளுமன்றத்தை நேற்று காலை வரை ஒத்திவைக்கும் நிலை சபாநாயகருக்கு ஏற்பட்டது. (சி)

## மரண அறிவித்தல்

"கிறிஸ்து எனக்கு ஜீவன்; சாவு எனக்கு ஆதாயம்"

### போதகர் S.J.பத்திநாதன்



(தலைமைப் போதகர், அடைக்கல கூடாரசபை, துணவி)

திருமலையைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட போதகர் S.J.பத்திநாதன் 09.01.2008 புதன் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சுவக்கின் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தியோ-பெர்ணதேத் தம்பதியரின் அன்பு மருமகனும் லூட்ஸ்மேரி (நோனா)யின் அன்புக் கணவரும் ராஜ், நயினார், கிறேஸ், ராணி, ரவீந்திரன், வரதராஜன் ஆகியோரின் சகோதரனும் ஜேசிந்தா, ராசா, மேஜாய், தங்கதுரை, பெரியன்ரி, பிறிசில்டா, கீதா, அருள்திலகம், சார்வே ஆகியோரின் அன்பு மைத்துனனும் சுமன் (டென்மார்க்), சுஜி, ஜொ்லினா (இத்தாலி), கிஷோ, ஜீட், ஜோய், தயாளன், சிமர்னா ஆகியோரின் பாசமிகு சிறிய தகப்பனாரும் சாந்தன், நிம்மி, சிட்டு,டோன், றொபேட், செல்வம் (போதகர்), விஜி (போதகர்), சுகாட், இந்திரா, மக்ஷி, சுரேந்தினி, ஆனந்தி, சின்னதம்பி, பினேகாஸ், யோசுவா ஆகியோரின் அன்பு மாமனும் சுமாணா, ஜெனி, ஜெறோன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (11.01.2008) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக இருபாலை கானான் ஜெப ஆலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் சகல சபை போதகர்கள், விசுவாசிகள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

*பழைய ஆஸ்பத்திரி வீதி,*
*வட்டுக்கோட்டை*
*T.P.No. 077-6906083* (69981)

தகவல்:
லூட்ஸ்மேரி *(மனைவி)*

## வாழ்த்துகின்றோம்

### திருமதி வரலக்ஷ்மி சோமசூரியசிங்கம்



சமூக சேவைக்கு இலக்கணமாக
திகழ்ந்த வரதாவே!
விவாக, பிறப்பு - இறப்பு
பதிவாளராக
நியமனம் பெற்றுள்ள உங்களை
எப்படி நாம் வாழ்த்தினாலும்
மிகையாகாது
கொக்குவில் - கோண்டாவில்
மண்மீது உம் சேவை ஓங்கிட
காளி அம்மன் அருளுடன்
மனமார வாழ்த்துகின்றோம்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
*(69979)*

கந்தசாமி குடும்பம், தர்மலிங்கம் குடும்பம்,
இராசமலர் குடும்பம், சிறிரஞ்சன் குடும்பம்,
யோகராணி குடும்பம், மகாதேவா குடும்பம்.

*உம்முடைய வீட்டில் வசமாய் இருக்கிறவர்கள் பாக்கியவான்கள் (சங்கீதம் 84.4)*

## கண்ணீர்க் காணிக்கைகள்



### போதகர் S.J. பத்திநாதன்

(தலைமைப் போதகர், அடைக்கல கூடாரசபை)

*கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது அருமைப் போதகர் S.J.பத்திநாதனின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், சபை மக்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

எபநேசர் ஜெப ஆலயம்,
வட்டுக்கோட்டை.

சபைப் போதகர்கள்,
ஊழியர்கள்,
விசுவாசிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஜன.11

நாலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட் டில் உயிர்நீத்த பொதுமக்களின் நினைவு தினம் யாழ். முற்றவெளியில் உள்ள நினைவாலயத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 9 மணியளவில் நடந்த இந் நிகழ்வு புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அலுவலகத்தால் ஒழுங்குசெய்யப் பட்டிருந்தது.

அந்த அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சுஜன். ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா) அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் மோகன் உட்பட பலர் இந் நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

(அ-1)

# சுற்றிவளைப்பில் எவரும் கைதாகவில்லை என்று படைத்தரப்பினர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.11

வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் துணவி, சங்கரத்தைப் பகுதிகளில் நேற்று முன்தினம் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது எவரையும் படையினர் கைது செய்யவில்லை என்று பலாலி படைத் தலைமையம் நேற்றுத் தெரிவித்தது.

எவரிடமும் அடையாள அட்டைகளைப் பெறவில்லை; எவரையும் முகாமுக்கு வருமாறு கூறவில்லை என்றும் நேற்றைய உதயனில் இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்தி குறித்துப் பிரஸ்தாபிக்கும்போது படைத் தலைமைய தகவல் அதிகாரி கூறினார்.

(அ-1)

# போர்நிறுத்தத்தை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையை இலங்கை அரசு ஒரு தலைப்பட்சமாக முறித்துக் கொண்டதையிட்டு நாம் மிகவும் அதிர்ச்சியும் ஏமாற்றமும் அடைந்துள்ளோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிய இராணுவ வெற்றிகளைக் குவித்து, படை வலுச்சமநிலையில் மேலோங்கியிருநத நிலையில், 2002ஆம் ஆண்டு இலங்கை அரசு போரில் விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள முடியாதென்பதை உணர்ந்து போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு முன்வந்தது.

இதனடிப்படையில் போர்நிறுத்த ஒப்பந்தம் 2002 பெப்ரவரி 22ஆம் திகதி இருதரப்புக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட்து.

இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய படை நடவடிக்கைகள் காரணமாக அழிவுக்குள்ளாகியிருந்த தமிழீழத் தாயத்தில் போர் அமைதியை ஏற்படுத்தி, இயல்பு வாழக்கையை எமது மக்கள் அனுபவிப்பதற்கு வழிகோலுவதற்கும் நிரந்தரமான அமைதியை ஏற்படுத்துவதற்கும் இந்த ஒப்பந்தம் அத்திவாரமாக அமையும் என்ற எதிர்பார்ப்புடன் இது கைச்சாத்திடப்பட்டது.

தமிழர் தாயகப் பகுதியில் சிங்கள ஆக்கிரமிப்புப் படையினரால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த இராணுவ வலயங்கள் அகற்றப்பட்டு -

அங்கு தமிழ் மக்கள் மீளக்குடியமர்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு -

தமிழர் தாயகப் பகுதிகளில் இலங்கைப் படையினரால் மூடப்பட்டிருந்த மக்கள் போக்குவரத்துப் பிரதான பாதைகளான ஏ-9 யாழ் - கண்டி, செங்கலடி - பதுளை வீதிகள் திறக்கப்பட்டு -

பாடசாலைகள், வழிபாட்டுத்தலங்கள், மக்கள் குடியிருப்புகள் ஆகியனவற்றிலிருந்து இலங்கைப் படையினர் வெளியேறி -

மீன்பிடித் தடைகளை முழுமையாக நீக்கி -

இயல்பு வாழ்க்கையை மீண்டும் தமிழர் பிரதேசத்தில் நிலைநாட்டுவதற்கான ஏற்பாடுகள் இந்த ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த ஒப்பந்தம் நூறுவீதம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை விடுதலைப் புலிகள் பேச்சு மேசைகளிலும், சர்வதேச பிரதிநிதிகளுடனான சந்திப்பு களின் போதும் மற்றும் தமது பல்வேறு அறிக்கைகளிலும் தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்ததுடன் இதனை நடைமுறைப்படுத்துவதற்குத் தம்மால் இயன்றவரை ஆக்கபூர்வமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இலங்கை அரசோ அல்லது இலங்கைப் படைத்தரப்போ போர்நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக செயற்படுத்தி இயல்பு வாழ்க்கையைத் தமிழர் தாயத்தில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருந்த கால வரையறைகளுக்கு அமைய மேற்கொள்ளாது தொடர்ந்தும் தாம் போர்நிறுத்த மீறல் நடவடிக்கைகளைத் தொடர்ந்த வண்ணமிருந்தன. அவ்வாறிருந்தும், தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை அரசுடன் 2002 செப்ரெம்பர் முதல் 2003 மார்ச் வரை ஆறு சுற்றுப் பேச்சுகளில் இதய சுத்தியுடன் கலந்துகொண்டு, இலங்கை அரசும் அதனது படைகளும் போர்நிறுத்த உடன்படிக்கையில் நடைமுறைப்படுத்த வேண்டிய சரத்துகளை தொடர்ச்சியாக மீறிவருகின்றமை தொடர்பாக அனுசரணையாளர்கள், கண்காணிப்புக்குழுவினர் மற்றும் சர்வதேச சமூகத்தினர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

இலங்கை அரசு போர்நிறுத்த உடன்படிக்கையின் சரத்துக்களை மீறியது மட்டுமன்றி, பேச்சு மேசைகளில் இணக்கம் காணப்பட்ட உடனடி மனிதாபிமானத் தேவைகளுக்கான உப குழு, பகைமைத் தணிப்பு மற்றும் இயல்பு வாழக்கையை ஏற்படுத்துவதற்கான உப குழு போன்ற குழுக்கள் செற்பட முடியாதவாறு பல்வேறு முட்டுக்கட்டைகளையும் போட்டு அமைதி முயற்சிகளைப் பலவீனப்படுத்தியது.

### பேச்சுக்களில் இருந்து தற்காலிகமாக ஒதுங்கவேண்டிய நிர்ப்பந்தம் உருவானது

போர்நிறுத்த உடன்படிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமை, பேச்சுகளில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படாமை, போர்நிறுத்த உடனபடிக்கை மற்றும் சமாதான முயற்சிகளில் ஒரு தரப்பாகிய விடுதலைப் புலிகளை சம தரப்பாக நடத்துவதற்குத் தவறியமை ஆகிய காரணங்களால் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் பேச்சு நடவடிக்கையிலிருந்து தற்காலிகமாக ஒதுங்கிக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இருந்தபோதிலும், விடுதலைப் புலிகள் போர்நிறுத்த உடனபடிக்கையிலிருந்தோ அல்லது சமாதான முயற்சிகளிலிருந்தோ முற்றிலுமாக வெளியேறாது, தொடர்ந்தும் நோர்வே அரசின் அநுசரணையுடன் சமாதான வழிகளில் ஒரு நிரந்தரமான அமைதித் தீர்வைத் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்த வகையில், பேச்சு முயற்சிகளுக்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதற்காகவும் தமிழர் தாயகப் பகுதியில் இடைக்கால நிர்வாகத்தைக் கொண்டுவந்து, போரினால் பேரழிவுக்குட்பட்டிருந்த தமிழர் தாயகப் பகுதிகளில் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்காகவும் இலங்கை ஒரு முன்மொழிவினை முன்வைக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்தினார்கள்.

இலங்கை அரசு முன்வைத்த இடைக்கால நிர்வாகத்திற்கான முன்மொழிவுகள் தமிழ் மக்களின் அன்றாட பிரச்சினைகளைக் கூடத் தீர்ப்பதற்குத் தேவையான அதிகாரங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. இதனால், விடுதலைப் புலிகள் நோர்வேயின் அனுசரணையுடன், பல நாடுகளிலுமுள்ள சட்ட வல்லுநர்களின் ஆலோசனையுடன், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை முன்வைத்தனர். இலங்கை அரசு பேச்சுக்கான ஓர் அடிப்படையாகக்கூட இதனை ஏற்கமறுத்தது. இதன் காரணமாக, பேச்சுக்குப் புத்துயிர் கொடுப்பதற்கு ஏதுவாக, விடுதலைப் புலிகள் நோர்வே மற்றும் சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளுக்கு அமைய எடுத்த முயற்சிகள் எந்தவித பலனையும் தந்துவிடவில்லை.

இதேபோலவே ஆழிப்பேரலை அனர்தத்தின் பின்னர் தமிழர் தாயகப் பகுதிகளில் மீள்கட்டுமானப்பணிகளை மேற்கொள்வதற்கெனக் கைச்சாத்திடப்பட்ட பொதுக் கட்டமைப் பையும் இலங்கை அரசு வழமைபோலவே குப்பைக்கூடைக்குள் வீசியது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை எள்ளளவும் கருத்தில் எடுக்காது, இலங்கை அரசு தமிழர் தாயகப் பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கைகளைத் தொடராக மேற்கொண்டு மனித அவலத்தை ஏற்படுத்திநின்ற வேளையில், மீண்டும் நோர்வே அனுசரணையாளர்களும் சர்வதேச சமூகமும் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் முக்கியததுவத்தை வலியுறுத்தி இருதரப்பினரும் பேச்சில் ஈடுபட வேண்டும் என்று வேண்டிக்கொண்டதற்கமைய விடுதலைப் புலிகள் ஜெனிவாவில் 2006ஆம் ஆண்டு இரு தடவைகள் பேச்சில் கலந்துகொண்டார்கள்.

இந்த இரண்டு பேச்சுகளின்போதும் விடுதலைப் புலிகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்கள். அத்துடன், விடுதலைப் புலிகள் தாம் போர்நிறுத்த ஒப்பந்தத்தை நூறுவீதம் நடைமுறைப் படுத்தத் தயாராகவுள்ள அதேவேளை, இலங்கை அரசு போர்நிறுத்த உடன்படிக்கையின் ஒரு சரத்தான ஏ-9 வீதியைத் திறந்து, யாழ். குடாநாட்டில், போக்குவரத்துப் பாதைகள் அனைத்தும் மூடப்பட்டு திறந்தவெளிச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டமை போன்று அவலப்படும் நான்கு இலட்சத்திற்கும் அதிகமான மக்களின் அவலங்களை நீக்குவதற்கு முன்வரவேண்டும் என மனிதாபிமான ரீதியில் வேண்டுகோள் விடுத்த போதிலும் இலங்கை அரசு இக்கோரிக்கையை நிராகரித்தது. இதன் காரணமாக பேச்சு முயற்சிகள் மீண்டும் தொடரமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டன.

### கடைப்பிடிக்கத் தயாராக உள்ளோம்

விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சுக் குழுத் தலைவராகவும் அரசியல்துறைப் பொறுப்பாளராகவும் விளங்கிய சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கை அரசு படுகொலை செய்தபோதிலும் கூட விடுதலைப் புலிகள் போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதற்கான முடிவு எதனையும் எடுக்கவில்லை.

இலங்கை அரசு தற்போது போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து எதுவிதமான நியாயங்களுமின்றி ஒரு தலைப் பட்சமாக விலகிவிட்டது.

இந்நிலையிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் போர்நிறுத்த உடன்படிக்கையை வரிக்கு வரி நடைமுறைப் படுத்தி அதனை நூறு வீதம் கடைப்பிடிப்பதற்குத் தயாராகவே இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

அத்துடன், சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் சமாதான முயற்சிகளுக்கான அனுசரணைப் பணியை நோர்வே அனுசரணையாளர்களே தொடர்ந்தும் முன்னெடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

சிங்கள இனவாத அரசுகள் காலத்திற்குக் காலம் தமிழ் மக்களின் நிரந்தர அமைதிக்காக மேற்கொள்ளப்பட்டு வந்த ஒப்பந்தங்கள் அனைத்தையுமே நடைமுறைப்படுத்தாது உதாசீனப்படுத்தியமையே வரலாறாகும்.

தமிழ் மக்கள் நிரந்தரமான அமைதியுடன் தமது தாயக பூமியிலே சுதந்திரமாக, கௌரமாக வாழ்வதற்கு சிங்கள ஆட்சியாளர்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள் என்பதை தற்போது முன்னெப்பொழுதும் இல்லாதவாறு அண்ணளவாக ஆறு வருடங்கள் நீடித்த போர்நிறுத்த உடன்படிக்கையை அவர்கள் முறித்தமை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

எனவே சர்வதேச சமூகம் இதனைப் புரிந்துகொண்டு, இலங்கை அரசுகளின் பொய்ப் பிரசாரத்திற்கு எடுபட்டு விடுதலைப் புலிகள் மீது விதித்திருக்கும் தடைகளை உடனடியாக நீக்கி, தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை ஏற்று, அவர்களின் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கு அங்கீகாரம் வழங்கவேண்டும் என்று [illegible] விடுதலைப் புலிகள் அறிக்கையில் [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-சி)

## மரண அறிவித்தல்கள்

### கனகரத்தினம் சோமசுந்தரம்

வேலணை வடக்கு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் கனகரத்தினம் சோமசுந்தரம் நேற்று (10.01.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மார்க்கண்டு - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், இரத்தினம்மாளின் அன்புக் கணவரும்,சாதானந்தராசன், சாதானந்தயோகன், சாதானந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஞ்சனா, கலையரசி, அருந்தவச்செல்வன்(ராசன் -கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஷன், பிரவீனன், நிருஷன், நவீனன் சஞ்சீவன், சயந்தினி, துஷ்யந்தினி, அயந்தினி, சிந்துஷ்யன், திருக்குமரன், தேனுகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2008) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5 ஆம் வட்டாரம்,*
*வேலணை வடக்கு.*

(69996)

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்வி தர்மலிங்கம் தவனேஸ்வரி

(ஆசிரியை, புங்குடுதீவு சிறிகணேசா வித்தியாலயம் )



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தர்மலிங்கம் தவனேஸ்வரி நேற்று(10.01.2008) வியாழக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் தர்மலிங்கம் - வள்ளியம்மை தம்பதியரின் மகளும் புவனேஸ்வரி, கருணாகரன், கனகேஷ்வரி (கனடா), கிருபாகரன் (ஆசிரியர்,யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற ஸ்ரீபன் மற்றும் தபாபரன் (கனடா)ஆகியோரின் மைத்துனியும், கஜு (சிட்டு)வின் சிறிய தாயாரும், ஆரதியின்(கனடா) பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2008) வெள்ளிக்கிழமை மதியம் 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*32,சிவப்பிரகாசம் வீதி,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

தகவல்:
த.கிருபாகரன்
(கிருபா- சகோதரன்)

(69997)

### திருமதி சிவகுரு ஞானப்பூங்கோதை

இணுவில் தெற்கைச் சேர்ந்த திருமதி சிவகுரு ஞானப்பூங்கோதை நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வை.சிவகுருவின் (V.S.S.K) அன்பு மனைவியும் திருமதி வை.கணேசபிள்ளை, பாரபரம் சொக்கலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி தவயோகராணி சத்தியமூர்த்தி, திருமதி நடராஜா புஸ்பரதி (ஜேர்மனி), திருமதி சிவராசா யோகேந்திரா(ஜேர்மனி), திருமதி கந்தசாமி பரஞ்சோதி, திருமதி அருமைநாயகம் பரிமளம், திருமதி சிவசுப்பிரமணியம் சந்திரவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும் க.சத்தியமூர்த்தி(ஓய்வுபெற்ற தபாலதிபர்), சிவசுப்பிரமணியம் (மருந்தாளர், காவேரி மருந்தகம்) சிவராஜா (ஜேர்மனி), காலஞ்சென்ற கந்தசாமி(பொறியியலாளர்), காலஞ்சென்ற அருமைநாயகம்(விரிவுரையாளர்), காலஞ்சென்ற நடராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் யோகம்மா(யோகா), டாக்டர் சண்முகலிங்கம், இந்திரன், சாதனி, மீரா, மதுரா, மதன மோகன், கஜானன் ஆகியோரின் அன்புப் போர்த்தியுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2008) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்று எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இஜ்ஜுவில் தெற்கு.*

தகவல்:
க.சத்தியமூர்த்தி
(மருமகன்)

### தவசிப்பிள்ளை இராமலிங்கம்

(ஓய்வுபெற்ற நடத்துநர், இ.போ.ச)



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தவசிப்பிள்ளை இராமலிங்கம் நேற்று (10.01.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தவசிப் பிள்ளை - முத்துப்பிள்ளையின் அன்பு மகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, சண்முகரத்தினம், அனுஷபவானி (தாதி உத்தியோகத்தர்,யாழ். போதனா வைத்தியசாலை), பவானி (ஆசிரியை, யா/நவக்கிரி அ.மி.த.க.பாடசாலை) ஜெயந்திமாலா(சுவிஸ்),முருகானந்ததாஸ்(லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் விமலாதேவி (தவம்-தேவி அச்சகம்), துரைராஜா, லோகநாயகி, சிவகுமாரன், செல்வநாயகம், இரவீந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2008) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*243,நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சிக் குழுவின் தீர்வு யோசனைகள் 23ஆம் திகதி ஜனாதிபதிக்கு கையளிக்கப்படும்

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு,ஜன11

''இம்மாதம் 23ஆம் திகதி சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் அமைச்சருமான திஸ்ஸவிதாரணவால் தீர்வு யோசனை சமர்ப்பிக்கப்பட்டதும் அந்த யோசனை அமைச்சரவையினால் திருத்தத்திற்குள்ளாக்கப்பட்டு நாடாளுமன்றத்திற்குள் கொண்டு வரப்பட்டு அத்தீர்வு யோசனையில் உள்ள விடயங்கள் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்படும்.''

- இவ்வாறு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று நாடாளுமன்றுக்குழு அறையில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

கடந்த புதன்கிழமை ஜனாதிபதியின் தலைமையில் கட்சித் தலைவர்களின் மாநாடு இடம்பெற்றது. அதில் அமைச்சர் திஸ்ஸவிதாரண சர்வகட் சிப் பிரதிநிதிகள் குழுவின் தீர்வு யோசனையைச் சமர்ப்பித்தார்.

அந்த யோசனை தொடர்பாக அப்போது பலரும் பலதரப்பட்ட கருத்துகளை முன்வைத்தனர். இறுதியில் இம்மாதம் 23ஆம் திகதி திஸ்ஸ விதாரணவிடமிருந்து இறுதி யோசனையைப் பெறத் தீர்மானமெடுக்கப்பட்டது.

அந்த அடிப்படையில் இம்மாதம் 23ஆம் இறுதித் தீர்வு யோசனை பெறப்படும். அந்த யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு திருத்தங்களுடன் நாடாளுமன்றுக்குக் கொண்டுசெல்லப்படும்.

அந்த யோசனையில் உள்ள விடயங்கள் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் விளக்கப்படும் - என்றார். (அ-சி)

## சகல பாடசாலைகளுக்கும் இரு தினங்கள் விடுமுறை

கொழும்பு,ஜன11

நாடுமுழுவதும் உள்ள அரச மற்றும் தனியார் பாடசாலைகளுக்கு இருதினங்கள் விடுமுறை நாட்களாக அரசு நேற்று அறிவித்திருக்கின்றது.

எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தைப்பொங்கல் பண்டிகை விடுமுறை தினத்தால் அன்றைய தினமும் அதற்கு முதல் நாள் 14ஆம் திகதியும் விடுமுறைவிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது எனக் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எம்.ரி. பண்டார தெரிவித்துள்ளார். (சி)

## பாதுகாப்புப் பிரிவினர் தங்குவதற்கென ஆனமடுவவில் இரு பாடசாலைகள் பூட்டு

கொழும்பு,ஜன11

ஜா-எலவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் உயிரிழந்த அமைச்சர் தஸநாயக்கவின் இறுதிச் சடங்கிற்குச் செல்லவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சர்கள் சிலருக்கான பாதுகாப்பு அதிகாரிகள் தங்குவதற்கு என புத்தளத்தில் உள்ள இரண்டு பாடசாலைகள் முன்னறிவித்தலின்றி மூடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புத்தளம் ஆனமடுவவில் உள்ள அமைச்சர் தஸநாயக்கவின் வீட்டில் அவரது இறுதிச் சடங்கு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (சி)

## அல்வாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தி சடலத்தை வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டார். (அ-1-70-218)

## மக்களிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமையை மீறுவதாக சுட்டிக்காட்டிய நீதிபதி, இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் தலைமையகப் பொலிஸ் அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

குடும்பப் புகைப்படங்கள் மற்றும் விவரங்கள் யாரால் எந்தச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது என்று ஆராய்ந்து எதிர்வரும் 11ஆம் திகதி அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறும் அவர் பணித்துள்ளார்.

அந்த அறிக்கையை நீதிமன்றம் ஆராய்ந்து உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கும் வரை கடற்படையினர் மன்னார் மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் என உத்தரவு பிறப்பித்தார்.

ஊடகவியலாளரைத் தாக்கிய பொலிஸார் இருவரையும் 50ஆயிரம் ரூபா சொந்தப் பிணையில் செல்வதற்கு அனுமதித்து, வழக்கு விசாரணைகளுக்கு அழைக்கும் போது நீதிமன்றுக்கு சமுகமளிக்க வேண்டும் என்றும் நீதிபதி தெரிவித்தார். (சி)

## போர் தீவிரக்கப்படுமானால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சருக்கு எழுதியுள்ளார் எனவும் புலித்தேவன் குறிப்பிட்டுள்ளார்.

அரசு ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகியமை குறித்துத் தாங்கள் அதிர்ச்சியும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர் என்று புலித்தேவன் குறிப்பிட்டுள்ளார்.

நோர்வேயைத் தொடர்ந்தும் அனுசரணையாளராகப் பணியாற்றுமாறு கேட்கிறோம். யுத்த நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தத் தயாராகவுள்ளோம் என யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளோம். - என்றும் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

''விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறவில்லையா?'' - என்ற செய்தியாளரின் கேள்விக்கு, ''நாங்கள் அவ்வாறு தெரிவிக்கவில்லை. உடன்படிக்கையை முடிந்தவரை சிறப்பாக நடைமுறைப்படுத்த முயன்றோம் என்றே சொல்கிறோம்.'' - என்று புலித்தேவன் சுட்டிக் காட்டினார்.

இலங்கை அரசு அதன் பாதுகாப்புச் செயலாளர், ஜனாதிபதி என அனைத்துத் தரப்பினருமே யுத்த முழக்கமிடுவதுடன், முழுமையான யுத்தத்திற்கு செல்லப் போகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர். அவர்களது மனோநிலையைப் புரிந்து கொள்ளுங்கள் என்பதை சர்வதேச சமூகத்திற்குத் தெரிவிக்கின்றோம். - என்றும் புலித்தேவன் குறிப்பிட்டுள்ளார். (சி)

## மீண்டும் அடையாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நலனைக் கவனிக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எல்.எம்.என். அமீன், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அடையாள அணிவகுப்புக் குறித்து நேற்று நீதிமன்றத்தில் ஆட்சேபனை கிளப்பினார்.

''பொலிஸார் கடந்த புதனன்று நடத்திய அடையாள அணிவகுப்பு ஏற்க முடியாதது. வழமையான சட்ட நடவடிக்கைகளுக்கு முரணான செயற்பாடு அது. சம்பந்தப்பட்ட சந்தேக நபர் மேற்படி சம்பவத்தில் ஏற்பட்ட காயத்திலிருந்து இன்னும் குணமாகவில்லை. முகத்திலும் பிற இடங்களிலும் பிளாஸ்டர் ஒட்டிய நிலையில் ஒரு சந்தேக நபரை அடையாள அணிவகுப்பில் நிறுத்துவது சரியா? அது நேர்மையான அடையாள அணி வகுப்பாக இருக்குமா? அத்துடன் இந்தச் சந்தேக நபரை சம்பவ இடத்தில் நேரடியாகக் கண்ட மேலும் பல சாட்சிகள் உள்ளனர். அவர்களை அடையாள அணிவகுப்புக்கு அழைக்காதமை பெரும் தவறு. எனவே, நடைபெற்று முடிந்த அணிவகுப்பை ரத்துச்செய்து புதிய அடையாள அணிவகுப்புக்கு உத்தரவிடவேண்டும்'' - என்று அவா கோரினார்.

இவ்விடயம் குறித்து நீதிமன்றம் திங்களன்று தனது முடிவை அறிவிக்கும் என நீதிவான் தெரிவித்தார்.

இதேசமயம், இறப்பதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் மகேஸ்வரன் எம்.பி. பங்குபற்றிய - 'சக்தி' தொலைக்காட்சியின் 'மின்னல்' நிகழ்ச்சியின் சி.டி. பதிவுகளை சம்பந்தப்பட்ட நிறுவனம் நேற்று நீதிமன்றில் ஒப்படைத்தது. (சி)


ஷஷ்டியப்தபூர்த்தி விழா

இத்தன் பிள்ளையார் கோயில் முன்னாள் பரம்பரை ஆதீனக் குருக்கள்

சோ.சண்முகநாதக்குருக்கள் (வரதர் ஐயா-புளியங்கூடல்)

இந்திராதேவி தம்பதியினர்

இன்று (11.01.2008) வெள்ளிக்கிழமை நல்லூர் சிவன் கோவில் மண்டபத்தில் விழாவை கொண்டாடுகின்றனர். அவர்களை ஆசிகூறி வாழ்துகின்றோம்.

சித்தப்பா, சித்தி,
சிவஸ்ரீ. நா.யோகீஸ்வரக் குருக்கள் குடும்பத்தினர்.
அத்தியடிப் பிள்ளையார் கோயில்,
அத்தியடி, யாழ்பாணம். (69995)

மலிவு விலையில்

ARPICO மெத்தைகள்

| | | |
|---|---|---|
| றிகல் | 6' x 3' | - 4000/= |
| றிகல் | 6' x 4' | - 5800/= |
| டபிள்லேயர் | 6' x 3' | - 6500/= |
| டபிள்லேயர் | 6' x 4' | - 8500/= |
| குசன் | 6' x 3' x 2'' | - 1800/= |
| குசன் | 6' x 3' x 1'' | - 780/= |
| குசன் | 6' x 3' x 1/2'' | - 450/= |
| பிளாஸ்ரிக் கதிரை | | - 900/= |

வியாபாரிகளுக்கு கழிவு உண்டு.

மற்றும் 'ALPHA' உருக்குத் தளபாடங்கள், கணனி மேசை, கணனிக் கதிரைகளும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:

திருச்செந்தூரன் வர்த்தக நிலையம்

315, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0212225910
(69992)

PERSONAL CLASSES
364, Stanly Rd. Jaffna.
AL, GAQ, BA-I, BA Final
தமிழ் - K.தர்மராஜா
Hin.cul - சிறில்
Pol.sci - பொன்.சந்துரு
Drama - கலகேஸ்
Eng - Maheswaran
BA -I
நாளை ஆரம்பம்

PHYSICS
A/L DAY CLASS
LIGHT
Sat/Sun/Tue/Thu 4-5pm
A/L 2008
PAPER CLASS
Sat/Sun 5-6pm
K.SELVAN
NAVALAR JAFFNA

கணக்கீடு
N.Sathees B.B.A(Fm.spl)
A/L 2009
பங்குடைமை
ஆரம்பம்:12.01.2008
சனி காலை 9.30
N.C.A. கல்வி நிலையம்
இணுவில

SCC
G.C.E(O/L) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
கணனிப் பயிற்சி நெறிகள்
சிறப்புக் கட்டணச் சலுகையில்
பிரிவு III ஆரம்பம்
16.01.2008 3.00p.m
55, Arasady Road, Jaffna.

நாவலர்
பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, யாழ்நகர்.
A/L 2010
கலை.வர்த்தக. கணித. உயிரியல் பிரிவுகள் சிறப்பாக நடைபெறுகின்றன
வர்த்தகப் பிரிவு
Eco- N.B.கஜிதரன்
Acc - P.பகீரதன்
B.st - V.K.ரவிகரன்
கலைப் பிரிவு
Tam-A.K.சித்திராஜன்
Geo - N.பாபு
Hin.cul - S.பத்மராஜா
Log - P. காந்
Pol.sci - A.Kஜெரிஸ்சன்
Dra - S.மதுரன்
Hin - B.மதுகரன்
His - பிரபல ஆசிரியர்
Chri - S.ராஜன்
Eng - K.மனோகரன்
கணித, உயிரியல் பிரிவு
Che-S.வாசு
Phy-K.செல்வன்
Com.Mat- B.மதுரன்
Bio - V.A.ஞானேந்திரன்
A/L 2010, DAY CLASS
வகுப்புக்கான நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்று கொள்ளலாம்

அறிவகம் அச்சுவேலி
A/L 2010, Day
கலை, வர்த்தகம்
ஆரம்பம் - 12.01.2008
சனி 11.00 a.m
Tam - Mr.கீர்த்தி
H.C - Mr.வசீல்
Geo - Mr.ஜெறார்
Log - Mr.குமரன்
Dra - Mr.ஜங்கரன்
Acc - Mr.பார்த்திபன்
Eco - Mr.அருணன்
Com- Mr.A.முரளி
அரசியல், வரலாறு பாடங்களும்.

சிங்களம் (எழுத,பேச,வாசிக்க)
By-MR K.கார்த்திகேசு
பிரிவு-1
ஆரம்பம்:-11.01.2008(இன்று)
FRI- 4 -5 p.m
Sat /Sun - 11-12 a.m
நாவலர் பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, யாழ்நகர்.

உயர்தரப்பரீட்சையில் 70%மானோர் சித்தியடையத் தவறிவிடுகின்றனர்.
சித்தியடைந்தோரில் 80% மானோருக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைப்பதில்லை.
எதிர்காலம் ??? மாற்று வழி இல்லையா!!!
துறைசார் நிபுணர்களின் வழிகாட்டல்கள்
காலம்:13-01-2008 ஞாயிறு காலை 10மணி
இடம் :நாவலர் கலாச்சாரமண்டபம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
அனுமதி இலவசம்!
ஆர்வலர்கள், பெற்றோர் கலந்துகொள்ளலாம்.
உங்கள் வாழ்வின் திருப்புமுனை

கணனி உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு உண்டு
ஒரு வருட உத்தரவாதத்துடன் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
P4 Mother Board, CD Drive, Flash drive, Modem, DVD Writer, 80GB Hard Disk, Combo Drive, Printer, Mouse, KeyBoard, Etc.
(Power tree UPS - 6,500/=)
Sky Computer System
No:- 89A, கண்டி றோட், சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.
T.P. No:- 021 222 9109

அற்லஸ் புவியியல் கல்வி நிலையம்
மயிலணி - சிவன் கோவில் முன், சுன்னாகம்
A/L - 2010 புவியியல்
ஆரம்பம்:- 12.01.2008
சனி பி.ப 3.00
A/L 2008 DAY CLASS
ஆரம்பம்:- 12.01.2008
சனி காலை 6.30
ஆசிரியர் - N.S சங்கர்
B.A (Hons) Geog.
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.01.2008 இல அச்சிட்டு வெளியிடப்பெற்றது.